Registered as a Newspaper

பக்கங்கள் 06

விலை ரூபா 5-00:

...நூலகம், யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்.

# ஈழநாதம்

THE EELANAATHAM     மக்கள் தினசரி     Peoples Daily

நாதம் 04     திருவள்ளுவர் ஆண்டு 2024     மார்கழி 07     (22-12-93)     புதன்கிழமை     ஒலி 307

## நோய்த்தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட மருத்துவ பிரிவினர் கோரிக்கை

அண்மைய மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதார நிலையை பேணும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபடுமாறு மலேரியா தடுப்பு பகுதி, சுகாதாரப் பகுதி ஆகியவற்றை விடுதலைப் புலிகளின் நடமாடும் மருத்துவப் பிரிவு கேட்டுள்ளது. குறிப்பாக இடம்பெயர்ந்தோர் முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு சுகாதார வசதி கிடைக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. சமூகசேவை அமைப்புகளோ வேறு எந்த அமைப்புகளோ இடம்பெயர்ந்த மக்களுக்கு முகாம்களை தெரிவுசெய்யும்போதும் குடியிருப்புகளை அமைத்து கொடுக்கும் போதும் அவற்றை தாழ்நிலங்களில் அல்லாது மேட்டுப் (6ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ள நிவாரணம் வழங்குவதில் அரசாங்க அதிகாரிகள் அசமந்தம்

### உரிய நேரத்தில் நிவாரணம் கிடைக்கவில்லை

(நமது நிருபர்)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சில அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் நிவாரணங்கள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

யாழ். குடாநாட்டில் கடந்த ஐந்து தினங்களாக பெய்த பெருமழைக்கு முன்பும் வெள்ள அபாயம் ஏற்பட்டு அதற்குரிய மறுசீரமைப்புக்களையும் நிவாரண நடவடிக்கைகளையும் செய்ய முன்பே அடுத்த வெள்ள அபாயம் முகாமில் தங்கியிருக்கும் மக்களை மாத்திரமின்றி நிரந்தர குடியிருப்பு வாசிகளையும் பாதிப்பிற்குள்ளாக்கியுள்ளமை தெரிந்ததே.

இதனால் இருக்க இடமின்றி, சமைத்து உண்ண வசதியின்றி இருக்கும் நிலையில் வெள்ளத்தால் இடம்பெயர்ந்தோர் சுகாதாரப் பிரச்சினைகளினாலும், மலசலகூட வசதியின்மையாலும் துன்பப்படும் வேளையில் சில அதிகாரிகளினதும், கிராம சேவையாளர்களினதும் அசமந்தப்போக்கினால் உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட மக்களுக்கு இவ் வேற்பாடுகளைச் செய்யத்தவறியுள்ளனர்.

இவ்வாறான நிலையை வடமராட்சி வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு, விபரங்களை காலம் தாழ்த்தி வழங்கியதால் பாதிக்கப்பட்டவர்கள் உரிய காலத்தில் இவ் வசதிகளைப்பெறத்தவறிவிட்டார்கள்.

நிவாரணம் என்பது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நேரத்தில் கிடைக்கவேண்டும் இதில் அரச அதிகாரிகள் கவனமாகச் செயற்படவேண்டியது அவசியமே. மீண்டும் ஒரு வெள்ள அபாயத்தினால் மக்கள் பாதிப்படைந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஏனைய உதவி அரசாங்க அதிபர்களும், வடமராட்சி வடக்கு உதவி அரசாங்க அதிபரையும், கிராமசேவையாளர்களையும் போன்று செயற்படாது துரிதமாக செயற்பட்டு பாதிக்கப்பட்ட மக்களை பாதிப்பிலிருந்து காப்பற்றி உதவுவார்கள் என பலரும் எதிர்பார்க்கின்றனர்.

## 35வருடங்களுக்குப் பின் கூடுதலான மழைவீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் ஒக்ரோபர், நவம்பர், இம்மாதம் 20ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் 1545 5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளது கடந்த 35வருடத்தில் பெறப்பட்ட வரைவில் இம்முறையே டிசம்பரில் ஆகக் கூடுதலான மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளது

இவ்வருட டிசம்பர் மாதத்தில்20ஆம்திகதிவரை 547.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளதுகடந்த 17 ஆம்திகதி 138.5மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் 20ஆம் திகதி 48.7மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பெறப்பட்டுள்ளது கடந்த டிசம்பரில் பெறப்பட்ட மழை வீழ்ச்சியிலும் இம்முறை இருமடங்கு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது

இந்த ஆண்டில் வடக்கு கிழக்கில் பெய்துவரும் பருவ மழை முன்னைய ஆண்டுகளை காட்டிலும் அதிகமா ( 6 ஆம் பக்கம் பார்க்க )

## பூநகரிப் பிரதேசத்தில் குளங்கள் உடைத்தன

(பூநகரி)

கடந்த 17ஆம் திகதி தொடக்கம் பெய்த பெருமழையினால் மன்னாரில் பூநகரி பிரதேசத்திலுள்ள அனேகமான குளங்களின் அணைக்கட்டு உடைந்து வெள்ளப் பெருக்கேற்பட்டதில் 1801 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன குடியிருப்புகளும், வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பொறுப்பாளர் திரு. மதன் ராஜ், நல்லூர் கிராமசேவகர் திரு. க. ஞானேஸ்வரன் மற்றும் ஆலங்கேணி கிராம சேவகர் திரு. சின்னராசா ஆகியோரும் மேற்கொண்டுள்ளனர். அத்துடன் இவர்களுக்கு நிவாரணமும் வழங்கிவருகின்றனர்.

சங்கானை உ. அ. அ. பிரிவிலுள்ள

# டி. பி. விஜேதுங்க அரசில் இனப் பேய் வளர்கிறது!

## அமைச்சர் தொண்டமான் சாடல்

(கொழும்பு)

**ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவின் அரசில் இனவாதப் பேய் மீண்டும் தலை தூக்கி வருவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவரும், அமைச்சருமான தொண்டமான் பி. பி ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.**

பி. பி. ஸிக்கு அமைச்சர் தொண்டமான் வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவிக்கையில், இந்நாட்டில் இது வரை இனப்பேய் இருந்தது. ஜே. ஆர். ஜெயவர்த்தனா காலத்திலும் அது இருந்தது. பிரேமதாசா காலத்திலும் ஓரளவு இருந்தது. இப்பொழுது இந்த அரசு வந்ததும் இனவாதப் பேய் மீண்டும் தலை தூக்குகின்றது என்றார்.

மேலும் பி பி ஸிக்கு அவர் வழங்கிய பேட்டியின் விபரம் வருமாறு,

கேள்வி; உங்கள் கட்சியின் ஏழு உறுப்பினர்கள் கடத்தப்பட்டுள்ளதாகக்கூறி பல ஆயிரக்கணக்கான தேயிலைத் தொழிலாளர்கள் கடந்த இரு நாட்களாக வேலை நிறுத்தம் செய்துவருகின்றனரே. இது எவ்வளவு காலம் நீடிக்கும்?

பதில்: விரைவில் முடிவு செய்வோம்

கேள்வி: உங்கள் கட்சிக்கும், ஐதேகவிற்கும் இடையிலான கூட்டணியில் விரிசல் தெரிகிறது. இதற்குக் காரணம் நீங்கள் காமினி திசநாயக்காவிற்கு அளிக்கும் ஆதரவுதானே?

பதில்: இதுவரை எமக்கும் அரசுக்கும் இருந்த உறவு சமீபத்தில் பாதிக்கப்பட்டது. அப்போது நான் காமினியை உபயோகித்துசில நடவடிக்கைகளை எடுத்தேன் அதன் அடிப்படையில் நான் அன்று வழங்கிய சில உறுதிமொழிகளைநிறைவேற்ற வேண்டியுள்ளது. அதனால் அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. நாம் சமாதானமாக போகவே பிரதமருடன் பேசிக் கொண்டிருக்கிறோம். எமக்கிடையே ஓரளவு ஒற்றுமை ஏற்பட்டுள்ளது எனினும் இந்த ஒற்றுமை ஏற்பட்டபோதிலும் நான் காமினிக்கு அளித்த சிலவாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டி (6 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட ஏழுபேர் மீது கட்சி கட்டுப்பாட்டை மீறியதாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

மத்திய மாகாண முதல் அமைச்சருக்கு எதிராகக் கொண்டுவர இருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் முதல் அமைச்சருக்கு ஆதரவு தெரிவித்துவாக்களிப்பதாகத் தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏழு

டதை அடுத்து, தொண்டமான் சந்தேசிய வானொலிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது;

மலையகத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக தான் காமினி திசநாயக்காவிற்கு ஆதரவாகச் செயற் (6 ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்டோர் விடுவிக்கப்படும்வரை

பெயர்ந்தோர் சுகாதாரப் பிரச்சினைகளினாலும், மலசலகூட வசதியின்மையாலும் துன்பப்படும் வேளையில் சில அதிகாரிகளினதும், கிராம

நவம்பர், இம்மாதம் 20ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் 1545 5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளது கடந்த 35வருடத் கூடுதலான மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளது

இவ்வருட டிசம்பர் மாதத்தில்20ஆம்திகதிவரை 547.7 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளதுகடந்த 17 ஆம்திகதி 138.5மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் 20ஆம் திகதி 48.7மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பெறப்பட்டுள்ளது கடந்த டிசம்பரில் பெறப்பட்ட மழை வீழ்ச்சியிலும் இம்முறை இருமடங்கு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது

இந்த ஆண்டில் வடக்கு கிழக்கில் பெய்துவரும் பருவ மழை முன்னைய ஆண்டுகளை காட்டிலும் அதிகமா

( 6 ஆம் பக்கம் பார்க்க )

காலத்திலும் அது இருந்தது. பிரேமதாசா காலத்திலும் ஓரளவு இருந்தது. இப்

வருமாறு,

கேள்வி; உங்கள் கட்சியின் ஏழு உறுப்பினர்கள் கடத்தப்

பதில்: விரைவில் முடிவு செய்வோம்

கேள்வி: உங்கள் கட்சிக்கும், ஐதேகவிற்கும் இடையிலான கூட்டணியில் விரிசல்

உறவு சமீபத்தில் பாதிக்கப்பட்டது. அப்போது நான் காமினியை உபயோகித்துசில நடவடிக்கைகளை எடுத்தேன் அதன் அடிப்படையில் நான் அன்று வழங்கிய சில உறுதிமொழிகளைநிறைவேற்ற வேண்டியுள்ளது. அதனால் அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. நாம் சமாதானமாக போகவே பிரதமருடன் பேசிக் கொண்டிருக்கிறோம். எமக்கிடையே ஓரளவு ஒற்றுமை ஏற்பட்டுள்ளது எனினும் இந்த ஒற்றுமை ஏற்பட்டபோதிலும் நான் காமினிக்கு அளித்த சிலவாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரிப் பிரதேசத்தில் குளங்கள் உடைத்தன

(பூநகரி)

கடந்த 17ஆம் திகதி தொடக்கம் பெய்த பெரு மழையினால் மன்னாரில் பூநகரி பிரதேசத்திலுள்ள அனேகமான குளங்களின் அணைக்கட்டு உடைந்து வெள்ளப் பெருக்கேற்பட்டதில் 1801 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன குடியிருப்புகளும், வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

நல்லூர், ஆலங்கேணி கொல்லகுறிச்சி, பள்ளிக்குடா, பத்தினிப்பாய் தெற்காலை ஆகிய இடங்களிலுள்ள மக்களே பெருமளவில் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்கள் தற்போது பாடசாலைகளிலும், கோயில்களிலும் தங்கியுள்ளனர். இவர்கள் தங்குவதற்கான ஒழுங்குகளை பூநகரி பிரதேசப் பொறுப்பாளர் திரு. மதன் ராஜ். நல்லூர் கிராமசேவகர் திரு. க. ஞானேஸ்வரன் மற்றும் ஆலங்கேணி கிராம சேவகர் திரு. சின்னராசா ஆகியோரும் மேற்கொண்டுள்ளனர். அத்துடன் இவர்களுக்கு நிவாரணமும் வழங்கிவருகின்றனர்.

சங்கானை உ. அ. அ. பிரிவிலுள்ள

# முன்கோடை கிராமம் நீரில் முற்றாக மூழ்கியது

## இரண்டு தினங்களின்பின் மக்கள் மீட்பு

(நமது நிருபர்)

யாழ். குடாவில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையினால் முன்கோடை கிராமம் முற்றாக நீரில் மூழ்கியது.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட மேற்படி முன்கோடை கிரா

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கதிரவெளியில் அதிரடி; 4 இராணுவத்தினர் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு கதிரவெளியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த மோதலில் நான்கு படையினர் கொல்லப்பட்டதாக கொழும்பில் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இவர்கள் கஜபாகு படையணியைச் சேர்ந்தவர்கள் எனவும் இம் மோதல் நேற்று காலை நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது கொட்டும் மழையில் ஐந்து நிமிட நேரம்மட்டுமே இம் மோதல் நீடித்ததாகவும் தெரியவருகிறது.

# கடல்மார்க்க விநியோகம்

## படையினர் அச்சம்

(யாழ்ப்பாணம்)

வட பகுதியிலுள்ள இராணுவ முகாம்களுக்குரிய விநியோகத்தை கடல்மார்க்கமாக மேற்கொள்ளுவதற்கு படையினர் அஞ்ச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

பூநகரித் தாக்குதலைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட நீருந்து விசைப்படகுகளால் கடற்படையினரின் கப்பல் நடமாட்டங்கள் தாக்குதலுக்கு இலக்காகலாம் என்ற அச்சம் படையினர் மத்தியில் காணப்படுவதாகவும், அதைத் தொடர்ந்து கடற்படையினரின் விநியோகக் கடமைகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது-

# விமானப் படைத்தளபதி இருமாதங்களில் ஓய்வு

(கொழும்பு)

சிறிலங்கா விமானப் படைத்தளபதி இருமாதங்களில் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற இருப்பதாக நேற்றைய கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போதைய விமானப் படைத்தளபதியான எயர் மார்ஷல் ரெரன்ஸ் குணவர்த்தனவே எதிர்வரும் பெப்பரவரி 17ஆம் திகதியுடன் ஓய்வு பெற இருப்பவராவார்.

கடத்தப்பட்ட ஏழுபேர் மீது

# கட்சி கட்டுப்பாட்டை மீறியதாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

மத்திய மாகாண முதல் அமைச்சருக்கு எதிராகக் கொண்டுவர இருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் முதல் அமைச்சருக்கு ஆதரவு தெரிவித்துவாக்களிப்பதாகத் தெரிவித்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏழு உறுப்பினர்கள்மீது விசாரணை நடாத்தப்படும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் சௌ. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேற்படி ஏழு உறுப்பினர்களும் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் இதை வெளியிட்டதை அடுத்து, தொண்டமான் சந்தேசிய வானொலிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது;

மலையகத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக தான் காமினி திசநாயக்காவிற்கு ஆதரவாகச் செயற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கடத்தப்பட்டோர் விடுவிக்கப்படும்வரை எமது வேலைநிறுத்தம் தொடரும்

## தொழிலாளர் பிரதிநிதிகள் தெரிவிப்பு

மத்திய மாகாணத்தின் கடத்தப்பட்ட ஏழு இ தொ. கா மாகாணசபை உறுப்பினர்களும் விடுவிக்கப்படும் வரை தாம் வேலைநிறுத்தத்தைக் கைவிடப்போவதில்லை என தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

மத்திய மாகாணசபையின் ஏழு இ.தொ.கா. உறுப்பினர்கள் கடத்தப்பட்டதை அடுத்து 65,000க்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துவருகின்றமை தெரிந்ததே.

எமது மத்திய மாகாண சபை உறுப்பினர்களை விடுவித்தால் மட்டுமே நாம் மீண்டும் வேலைக்கு திரும்புவோம் தொடர்ந்துநிலைமை நீடித்தால் ஏனைய தோட்ட தொழிலாளர்கள், தொழிற்சங்கங்களின் உதவியும்பெறப்படும் என இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தோட்ட தொழிற்சங்க பிரிவு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் மிரட்டல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

மத்திய மாகாண முதலமைச்சருக்கு எதிரான

# நம்பிக்கையில்லா பிரேரணை அவைத் தலைவரால் நிராகரிப்பு

(கொழும்பு)

மத்திய மாகாண சபை முதலமைச்சருக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை நிராகரிக்கப்பட்டுவிட்டது. நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒழுங்கு விதிமுறைப்படி சமர்ப்பிக்கப்படவில்லை எனக் கூறி அவை தலைவரினால் நிராகரிக்கப்பட்டது.

மாகாணசபை அங்கத்தவர் பந்துல ராஜபக்ஷ இது சம்பந்தமாக எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையை அவை தலைவர் ஏற்றுக்கொண்டு இப்பிரேரணையை நிராகரித்தார். நேற்றுக் கூடிய மத்திய மாகாண சபைக் கூட்டத்தில் முதலமைச்சருக்கு எதிரான

(6 ஆம் பக்கம் பார்க்க)

# தென் மாகாண சபை கலைக்கப்படும் நிலை

தென் மாகாண சபையைக் கலைக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன இம் மாகாண சபையின் வரவு செலவு திட்ட விவாதம் நாளை நடைபெறவுள்ளது. எதிரணி உறுப்பினர் கடத்தப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நிலை ஏற்படலாம் என சந்தேசிய தெரிவித்தது.

ஆனால் மத்திய மாகாண சபை நிலை போன்று ஒரு நிலைஏற்படுமாயின்நிலைமை என்னவாகும் என தெரியாது எனவும் அச்செய்தி குறிப்பிட்டது. இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி,கடத்தப்பட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

மத்திய மாகாண சபையின்

# அவைத் தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

(கொழும்பு)

மத்திய மாகாண சபையின் அவை முதல்வருக்கு எதிராக அவர்மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளதாக மத்திய மாகாண எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் 'சந்தேசிய' வானொலிக்குத் தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணசபை முதலமைச்சரை காப்பாற்றும் நோக்குடனேயே எதிர்க்கட்சியினரால் கொண்டு வரப்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# தென்மாகாண சபையின் ஆளுநர் இராஜினாமா

(கொழும்பு)

தென்மாகாணசபை ஆளுநர் பாக்கீர் மாக்கார் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவரின் இராஜினாமா தொடர்பாக இவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும் நேற்று மாலை 5-30 மணிக்கு அவ

( 6ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலை அரங்கில் நவம்பர் மாத ஒளிவீச்சு

(யாழ்ப்பாணம்)

நிதர்சனம் நிறுவனத்தால் தயாரித்து வெளியிடப்படும் ஒளிவீச்சு நவம்பர் மாத வீடியோ சஞ்சிகை வெளியாகியுள்ளது. இது நாளை வியாழக்கிழமைமாலை 5.00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காண்பிக்கப்படஉள்ளது.

இம்மாத சஞ்சிகையில் தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களால் திறந்துவைக்கப்பட்ட காந்தரூபன் அறிவுச்சோலைதிறப்புவிழா காட்சிகளுடன், சிறப்புச் செய்தியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் வரலாற்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### துளிர்
தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர் அறிவியல் இதழ். கிடைக்கும் இடம் வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6861)

### உணவு சேவை
புரியாணி, நூடில்ஸ்வகை, சூப்வகை, (f) பிறைட்றைஸ், சிக்கன் 65, ரோல்ஸ், கட்லட், etc. etc etc. -பரிமாறுசேவை உடன் நாடவும், காருண்யா சைனீஸ் ஹொட்டேல் இல. 166, 1-ம குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (6957)

### மகாதேவா ஜோதிடம்
குறிப்பு அசிஷ் எண்மாற்றம் ஆகியவற்றுக்கு ஜே திடனைத் தினசரி 140, செல்லர் வீதி நல்லூரில் சந்திக்கலாம். (6968)

### இந்தியா டுடே
இலங்கை ஏஜண்டான P.S சுந்தரம் அன்சன்ஸ் அவர்களால் தமிழீழத்தில் ஏஜண்டாக எம்மை நியமித்துள்ளார்கள் வாடிக்கையாளரின் நன்மை கருதி விலை குறைத்துள்ளோம். மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம் சி - 8111

### கலண்டர், டயறி வகைகள்
லீலா கலண்டர், சகல வித மான டயறி வகைகள், கிறிஸ்மஸ் காட், அன்பளிப்பு அடிப்பதற்குரிய கலண்டர் மொத்தமாகவும், சில்லறையாகவும் மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். சி - 8112

### இறைச்சிக் கோழி
புறொயலர் இறைச்சிக் கோழி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு தேவி நகை மாளிகை பிரதான வீதி பருத்தித்துறை (6977)

### வெற்றுப்போத்தல்கள் சேவை
வெற்றுப் போன்ஸிட்டா, மாயைட், வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் மூயுனும், ஜம்.புரோட்டினக்ஸ் பியர் சோடியல் போத்தல்கள் மூடி


# பண்டிதர் குடியிருப்பு மக்களுக்கு படகுமூலம் உதவிப் பொருள்கள்

(யாழ்ப்பாணம்)

செற்பலி பண்டிதர் குடியிருப்பிற்கு தற்போது 'படகுச் சேவை' நடைபெற்று வருகின்றது. கடந்த சில தினங்களாகப் பெய்த கடும் மழையினால் குடியிருப்புக்குச் செல்லும் கிழக்கு, மேற்குப் பகுதி பாதைகள் வெள்ளம் நிறைந்து கடல் நீரேரி போன்று காணப்படுவதால் குடியிருப்புமக்கள் உள்வரவும் வெளிச் செல்லவுமே இந்த சேவை நடாத்தப்படுகின்றது. இதற்கென வெளியிணைப்பு இயந்திரங்கள் பொருத்தப்பட்ட படகுகள் ஈடுபடுத்தப்படுகின்றன. படகுகள் மூலமே தற்போது குடியிருப்பு மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருளகளும் கொண்டு செல்லப்படுகின்றன மேலும் கடும் மழையினால் குடியிருப்பில் பெரும் பகுதிக் குடிசைகள் சேதமாகி விட்டதாகவும் மக்கள் பாடசாலை, தமிழர் புனர்வாழ்வுக்கழக காரியாலயம் போன்றவற்றில் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது- (22)

## வெள்ளத்தால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து நாவாந்துறை ஐந்து சந்திப் பகுதியில் வசித்துவரும் குடும்பங்களில் சுமார் 35 குடும்பங்கள் மழை வெள்ளம் வீட்டுக்குள் புகுந்துள்ளதால் அவர்கள் தமது வீடுகளை விட்டு அப்பகுதியில் இருக்கும் வணக்கஸ்தலத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர். (88)

# மலையகத்திலும் தமிழரோடு மோதும் நிலை ஏற்படக்கூடாது

(கொழும்பு)

மலையகக் காணி விவகாரங்களை சுமுகமான பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்த்துக் கொள்ள வேண்டும் தமிழர்களோடு மோதிக் கொள்கின்ற நிலை ஏற்படக் கூடாது மலையகத்திலுள்ள தமிழர்களைக் கொல்லவோ, அழிக்கவோ முடியாது. பிரச்சினைகளை நீதியான முறையில் தீர்க்க வேண்டும். இவ்வாறு சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான டி. எம். ஜயரத்னா பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார்.

காணி அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், மலைநாட்டில் இரண்டு வீத காணிகள் சிங்கள மக்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்

டி, எம். ஐயரத்னா

பது 1935இல் ஏற்கப்பட்டது. ஆனால் இன்று சிங்கள மக்கள் மலசலகூடம் அமைப்பதற்கு கூட மலையகத்தில் நிலம் பெற முடியாமல் இருக்கிறது என்றும் தெரிவித்தார்.

## ஓய்வூதியம் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களிற்கான மார்கழி மாத ஓய்வூதியம் அதன் கிராமிய வங்கியில் தற்பொழுது பணமாக வழங்கப்படுகிறது. அத்துடன் ஒரு குடும்பத்திற்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணையும் ஒருலீற்றர் 25/- ரூபா படி அதன் எரிபொருள் விற்பனை நிலையத்தினூடாக வழங்கப்படுகிறது. (88)

# கொழும்புப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் மூடப்பட்டது

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடமாணவர்களிடையே மோதல்கள் இடம் பெற்று வருவதையடுத்து அப்பீடம் நேற்று முன்தினம் மாலை 4 மணியுடன் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது இதற்கான உத்தரவை கொழும்பு பல்கலைக் கழக உபவேந்தர் பிறப்பித்துள்ளார்.

விஞ்ஞான பீட மாணவர்கள் அனைவரும் கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியேறி விடுமாறு உபவேந்தர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் உத்தரவிட்டுள்ளார்.

# இராணுவ முகாம்களிலும்

# கணித, விஞ்ஞான சேவைக்கால பயிற்சி

க. பொ. த (உ. த) விஞ்ஞான கணித சேவைக்காலப் பயிற்சி வகுப்பு பின்வரும் இடங்களில் குறித்த காலங்களில் நடைபெறும் தூயகணிதம், பிரயோக கணிதம், இரசாயனவியல் ஆகிய பாடங்கள் யா-இந்துக்கல்லூரியில் இம்மாதம் 27-ம், 28-ம், 29-ம் திகதிகளிலும் பௌதிகவியல் யா-வேம்படி மகளிர் கல்லூரியில் 27-ம், 28-ம் திகதிகளிலும் தாவரவியல், விலங்கியல் யாழ். பல்கலைக்கழகத்தில் விலங்கியல், தாவரவியற்துறைகளில் 30-ம் திகதியும் நடைபெறும்.

இந்த ஆண்டில் யாழ்-பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சேவைக்காலப்பயிற்சி வகுப்புக்களிற்கான சகல கொடுப்பனவுகளும் இந்நாட்களில் மட்டுமே வழங்கப்படும்.

# அவசரதேவையுள்ளோர்க்கு ஒரு மணி நேரத்தில் விசா
## கண்டியிலுள்ள இந்தியத்தூதுவரகம் அறிவிப்பு

(கொழும்பு)

அவசர தேவை இருப்பவர்களுக்கு ஒரு மணி நேரத்தில் விசா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கண்டியிலுள்ள இந்தியத் தூதுவரகம் அறிவித்துள்ளது. இந்திய துணைத் தூதுவர் அலுவலகம் இதற்காக சில சிறப்பு வசதிகளை செய்திருப்பதாகவும், தொலை தூர இடங்களிலிருந்து விசா பெற வருபவர்களின் வசதி கருதியே இந்த வசதி செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

# கல்வியியல் கல்லூரிக்கு அனுமதி இன்னும் இல்லை

மலையகத்தில் சகல வசதிகளோடும், ஜேர்மன் அரசின் உதவியோடும நிர்மாணிக்கப்பட்டுள்ள பத்தனை சிறீபாத கல்வியியல் கல்லூரிக்கு 1993 ஆம் ஆண்டுக்குரிய மாணவர் இன்னமும் சேர்த்துக்கொள்ளப்படவில்லை-

1989 மே மாதத்தில் அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினால் அத்திவாரமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரிக்கு 05-02-92-ல் 240 மாணவர்கள் சேர்க்கப்பட்டு 23-08-92-ல் அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவினால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது-

## கை கலப்பு

பணக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினை கத்திவெட்டில் முடிவடைந்துள்ளது. சாவகச்சேரியின் பெருங்குளம் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் எஸ். சிவகுமார் (38) என்பவர் முதுகில் படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (86)

## கூட்டுறவுக் கல்வி பயிற்சி நெறி

1993-ம் ஆண்டின் யாழ் மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி திட்ட உத்தியோகத்தர் தொடர் பயிற்சி நெறி இம் மாதம் 22-ம் 23-ம் திகதிகளில் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும் இப் பயிற்சி நெறி கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்விப் பிரிவின் தொழில்நுட்ப பிரிவின் உதவியுடன் நடாத்தப் படுவதாகவும் சங்கங்கள் தமது கல்வி உத்தியோகத்தர்களை தவறாது அனுப்பி வைக்குமாறும் மேற்

## புதிய கட்டடம் திறப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வியாபாரி மூலை பளவத்தை வலம்புரி துளிர்கள் பாலர் பாடசாலைக்கெனப்புதிதாக அமைக்கப்பட்ட பாலர்பாடசாலைக் கட்டடத் திறப்புவிழா வலம்புரி அறிவாலயத் தலைவர் திரு பொன் பூரணம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

## ஏகாதசி திருவிழா

(பருத்தித்துறை)

சரித்திரப் பிரசித்திபெற்ற விஷ்ணு ஆலயமான ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் எதிர்வரும் 24-ம் திகதி [illegible]

# தந்தை தனயன் மர்மமறைவு பொலிசார் மீது விசாரணை

(கொழும்பு)

அக்ரகுஸ்ஸ பொலிஸ் பகுதியிலுள்ள அமுஹேன்விலபகுதியிலிருந்து ஒரு தந்தையும் மகனும் காணாமற் போன சம்பவம் தொடர்பாக அப்பகுதியிலுள்ள பொலிஸ் நிலையமொன்றின் பொறுப்பதிகாரி உட்பட பதின்மூன்றுபொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது இரகசியப் பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

காணாமற் போயுள்ளவர் தொடர்பாக ஆராயும் விசாரணைக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க விசாரணைகளிலிருந்து இந்த இருவரும் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும், இச் சம்பவத்துடன் பொலிசாருக்கு தொடர்பு இருக்கலாம் எனவும் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து இரகசியப் பொலிசார் இது பற்றி விசாரணை நடத்த ஆணைக்குழு உத்தரவு பிறப்பித்துள்ளது.

## மலேரியா பரவுகிறது

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் மலேரியா நோய் மிக வேகமாகப் பரவுகிறது. பெருந்தொகையான மக்கள் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். வடமராட்சிப் பகுதியில் எக்காலத்திலும் இல்லாதவாறு நுளம்புகளின் பெருக்கம் மிக மோசமாக இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர். மிக வேகமாகப் பெருகிவரும் நுளம்புகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது விட்டால்நுளம்புத்தொல்லைகளால் மக்கள் பயங்கர விளைவுகளை அனுபவிக்க வேண்டிய அவலநிலை உருவாகும் என கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## பொதுச்சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டம் வரும் தை மாதம் 9ஆம் திகதி நடைபெற உள்ளதாக அறியப்படுகிறது. (88)

# நினைவு கூருகின்றோம்...

1993-12-22

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தொண்டமானாற்றைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியரான தமிழ் மகன்.

1985ஆம் ஆண்டு அக்கரைப்பற்றுப் பகுதியில் சிறிலங்காப் படையினரின் முற்றுகையின்போது சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

★ **அபுஸ்கோன் இறைசன்** (அக்கரைப்பற்று - அம்பாறை)

★ **மூர்த்தி** (கணபதிப்பிள்ளை மூர்த்தி - அட்டைப்பள்ளம் - அம்பாறை)

1986ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**ஈசன்** (சாமித்தம்பி இரத்தினசிங்கம் - வந்தாறுமூலை - மட்டு)

இதே இடத்தில் சிறிலங்கா அதிரடிப் படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

**யோகன்/சரத்** (இராசையா யோகராசா - வந்தாறுமூலை - மட்டு)

**மில்டன்** (சிங்கராசா திலகன் - வந்தாறுமூலை - மட்டு)

1987ஆம் ஆண்டு கோண்டாவில் - காரைக்காலில் இந்தியப் படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். குமார்** (செல்வநாயகம் சிவகுமார் (சிவா)- இலங்கேஸ்வரன் வீதி - கோண்டாவில்)

பதற்குரிய கலண்டர் மொத்தமாகவும், சில்லறையாகவும் மமிலன், ஸ்ரீகந் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம்.
சி - 8112

## இறைச்சிக் கோழி

புறொய்லர் இறைச்சிக் கோழி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு தேவி நகை மாளிகை பிரதான வீதி பருத்தித்துறை (6977)

## வெற்றுப்போத்தல்கள் தேவை

வெற்றுப் போன்லிட்டா, மாபைட், வீவா, ஹர்லிக்ஸ் போத்தல்கள் மூடியுடனும், ஜம்.புரோட்டினெக்ஸ் பியர் சோடியல் போத்தல்கள் மூடியில்லாமலும் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட் 14 சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (சி 8054)

## விபரங்கள் பார்வையிடலாம்

(பருத்தித்துறை)
கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தையல் போதனாசிரியர்கள் பற்றிய விண்ணப்பங்களின் முழு விபரங்களும் அடங்கிய அறிவித்தல்கள் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுளன இப்பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பக் கட்டணத்தைப் பிரதேச செயலக நிதிப் பிரிவில்செலுத்திப்பற்றுச்சீட்டைப் பெற்று விண்ணப்பிக்கலாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (25)


## எடிசன்

அக்கடமி
(யாழ் இந்து அருகில்)
K.K.S.வீதி, யாழ்.

SPOKEN ENGLISH BY BRITTO

ஆரம்பம்: 23.12.93
பி ப. 4 45
Time Table
வியா - வெள் 4.45 மணி
(சி-8177)


தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், மலைநாட்டில் இரண்டு வீத காணிகள் சிங்கள மக்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்

மண்ணெண்ணையும் ஒருலீற்றர் 25/- ரூபா படி அதன் எரிபொருள் விற்பனை நிலையத்தினூடாக வழங்கப்படுகிறது. (88)

# கொழும்புப் பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் மூடப்பட்டது

(கொழும்பு)
கொழும்பு பல்கலைக்கழக விஞ்ஞான பீடமாணவர்களிடையே மோதல்கள் இடம்பெற்று வருவதையடுத்து அப்பீடம் நேற்று முன்தினம் மாலை 4 மணியுடன் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது இதற்கான உத்தரவை கொழும்பு பல்கலைக் கழக உபவேந்தர் பிறப்பித்துள்ளார்.

விஞ்ஞான பீட மாணவர்கள் அனைவரும் கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தை விட்டு வெளியேறி விடுமாறு உபவேந்தர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் உத்தரவிட்டுள்ளார்.

# இராணுவ முகாம்களிலும் வெள்ளப்பெருக்கு

(கொழும்பு)
வடக்கு, கிழக்கில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையினால் சில இராணுவ முகாம்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளதாக இராணுவ உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்-

இவ்வாறு வெள்ளம் புகுந்த இராணுவ முகாமிலுள்ள உணவு, ஆயுதங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் உடனடியாகஅப்புறப்படுத்தப் பட்டதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## வினாத்தாள்கள் வந்தன

(யாழ்ப்பாணம்)
இன்று ஆரம்பமாக இருக்கும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று முன்தினம் யழ் கல்வித் திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்டன.

யாழ் கல்வித் திணைக்கள அதிகாரிஒருவரே இவ்வினாத்தாள்களை கொழும்பில் இருந்துஇங்குஎடுத்துவந்தார். மேலும் இப்பரீட்சைகள் தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெறவுள்ளன. (பா)

## விளையாட்டு விழாவும் பரிசளிப்பும்

(பருத்தித்துறை)
பருத்தித்துறை ஞான சம்பந்தர் கலை மன்ற பாலர் பாடசாலை விளையாட்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும் இலங்கை வங்கியின் "சிறுவர் பொன் அரும்பு கணக்கு" அறிமுக விழாவும் கலைமன்ற மைதானத்தில் இளைப்பாறிய இலங்கை வங்கி அதிகாரி திரு. ச. அழகாத்தினம் தலைமையில்நடைபெற்றது பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. வி. தில்லைநாதன் விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறுவர்களுக்கானபரிசில்களை வழங்கியதுடன் இலங்கை வங்கியின் "சிறுவர் பொன் அரும்புக் கணக்கையும்" அறிமுகம் செய்து வைத்தார் (25)

## இலக்கிய கருத்தரங்கு

'தமிழ்மொழியும் இலக்கியமும்'பாடத்திற்கான சேவைக் காலப் பயிற்சிக் கருத்தரங்கு வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இன்று ஆண்டு 9, 10.11 பாடத்திட்டத்திற்கும், நாளை 6, 7, 8, பாடத்திட்டத்திற்கும் இப்பயிற்சிக் கருத்தரங்குகள்நடைபெறவுள்ளன. சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை மேற்படி கருத்தரங்கில்கலந்து கொள்ளுமாறு சேவைக்கால பயிற்சி ஆலோசகர் எம்.எஸ். ஸ்ரீதயாளனின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## கருத்தரங்கு நடைபெற்றது

வடமராட்சிப் பகுதியில் உள்ள மூன்று பிரதேச செயலர் பிரிவுகளினதும் உள்ளூராட்சி மன்றங்களுடன் இணைந்த சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள், வாசகர் வட்ட உறுப்பினர்கள், பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான "கிராமிய அபிவிருத்தியும் போஷாக்கு உணவு வகைகளும்" பற்றிய கருத்தரங்குகளை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா உள்ளூராட்சி மன்றங்கள் ரீதியாக நடத்தினார். (25)

கப்பட்டுள்ளார். (86)

## கூட்டுறவுக் கல்வி பயிற்சி நெறி

1993-ம் ஆண்டின் யாழ் மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி திட்ட உத்தியோகத்தர் தொடர் பயிற்சி நெறி இம் மாதம் 22-ம் 23-ம் திகதிகளில் யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும் இப் பயிற்சி நெறி கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்வி பிரிவின் தொழில் நுட்ப பிரிவின் உதவியுடன் நடாத்தப் படுவதாகவும் சங்கங்கள் தமது கல்வி உத்தியோகத்தர்களை தவறாது அனுப்பி வைக்குமாறும் மேற்படி சபை அறிவித்துள்ளது. (22)

## புதிய கட்டடம் திறப்பு

(பருத்தித்துறை)
பருத்தித்துறை வியாபாரி மூலை பளவத்தை வலம்புரி தளிர்கள் பாலர் பாடசாலைக்கெனப்புதிதாக அமைக்கப்பட்ட பாலர்பாடசாலைக் கட்டடத் திறப்புவிழா வலம்புரி அறிவாலயத் தலைவர் திரு பொன். பூரணம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

## ஏகாதசி திருவிழா

(பருத்தித்துறை)
சரித்திரப் பிரசித்திபெற்ற விஷ்ணு ஆலயமான ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் எதிர்வரும் 24-ம் திகதி சுவர்க்கலோகவாயில் ஏகாதசி திருவிழா நடைபெறுகின்றது. (25)

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னையா கனகசபை

(மக்கள் வங்கி காசாளர்)

தோற்றம் 01-01-1943 — மறைவு 02-01-1993

நீர் சென்று ஓராண்டாகினாலும்
உன் நினைவு மாறவில்லை!!

இன்று 22ஆம் திகதி எமது இல்லத்தில் நிகழும் நினைவு நாளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

கிராமக் கோட்டடி, புலோலி. (சி 8179) மனைவி, பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், பெறாமக்கள்.

★ **அபுஸ்கோன் இறைசன்** (அக்கரைப்பற்று - அம்பாறை)

★ **மூர்த்தி** (கணபதிப்பிள்ளை மூர்த்தி - அட்டைப் பள்ளம் - அம்பாறை)

1986ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**ஈசன்** (சாமித்தம்பி இரத்தினசிங்கம் - வந்தாறு மூலை - மட்டு)

இதே இடத்தில் சிறிலங்கா அதிரடிப் படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

**யோகன்/சரத்** (இராசையா யோகராசா - வந்தாறுமூலை - மட்டு)

**மில்டன்** (சிங்கராசா திலகன் - வந்தாறுமூலை - மட்டு)

1987ஆம் ஆண்டு கோண்டாவில் - காரைக்காலில் இந்தியப் படையினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். குமார்** (செல்வநாயகம் சிவகுமார் (சிவா)- இலங்கேஸ்வரன் வீதி - கோண்டாவில்)

1988ஆம் ஆண்டு பாலைச்சோலைப் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**லெப். தவம்** (ஞானமுத்து தவராசா - களுவங்கேணி - மட்டு)

திக்கம் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கரவெட்டி, தேவரையாளி வாசியான பனம்பொருள் அபிவிருத்திச் சபை ஊழியரான பொதுமகன்.

1990ஆம் ஆண்டு கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**அலன்** (குருசாமி ஜீவராசா - விசுவமடு - முல்லைத்தீவு)

**ரமா** (லோகேஸ்வரி சிதம்பரப்பிள்ளை - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

**கப்டன் ஆஷா** (பத்மாவதி (கலா) நடராசா - நாயன்மார்கட்டு - யாழ்)

**கப்டன் அஜீத்தா** (சுகுணராணி கந்தையா - சங்கத்தானை, சாவகச்சேரி - யாழ்)

**சாம்னன்** (செல்வநாயகம் செல்வச்சந்திரன் - ஏழாலை வடக்கு - யாழ்)

**ஸ்ராலின்** (துரைரட்ணம் பகிரதன் - 170|2, கண்டிவீதி, அரியாலை - யாழ்)

**ரதிகலா** (சுகந்தினி கனகரட்ணம் - குடத்தனை வடக்கு - வடமராட்சி கிழக்கு)

மட்டு - மகிழடித்தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நின்ற தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட ஆரையம்பதியைச் சேர்ந்த தமிழ் வயோதிபர்.

1991ஆம் ஆண்டு அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் நிகழ்ந்த,எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த -

**சபேசன்** (நவரத்தினம் உதயகுமார் - குமுழமுனை - மணலாறு)

**ஆனந்தன்** (விவேகானந்தன் விக்கினதாஸ் - நவிண்டில், நெல்லியடி - யாழ்)

1992ஆம் ஆண்டு மட்டு - திருக்கோயில் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப். விஜயநாதன்** (சிவலிங்கம் ஜெயராசா - பொத்துவில் - அம்பாறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**
(சி/8174)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம் 22-12-93
நல்லூர் கிளை நூலகம்.

# உலகவங்கியின் சட்டைப்பைக்குள் நாடு வைக்கப்பட்டு விட்டது

## சபையில் தினேஷ் குணவர்த்தனா தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு இப்போது உலகவங்கியின் சட்டைப்பைக்குள் வைக்கப்பட்டுவிட்டது. டாலர் நோட்டு குறித்து பைத்தியக்காரத்தனம் எமது நாட்டில் தான் அதிகமாகி இருக்கிறது. இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரான தினேஷ் குனவர்த்தனா பாராளுமன்றத்தில் பேசும்போது தெரிவித்தார். சுகாதார மகளிர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், அரசாங்கம் மக்கள் படும் துயரங்கள் குறித்து உணர்வதாக இல்லை. வைத்தியசாலைகளில் மருந்துப் பொருள்கள் இல்லை. தனியார் கடைகளில் மருந்துப் பொருள்களின் விலைகள் பெருமளவுக்கு அதிகரித்த வண்ணமே உள்ளது.

இந்தியாவில் தமது நாளாந்த தேவைக்கான மருந்துகள் அங்கேயே தயாரிக்கப்படுகின்றன. இங்கே இத்தகைய தயாரிப்புகளுக்கு ஊக்கம் தரப்படுவதே இல்லை. இதனால் நாடு உலக வங்கியின் சட்டைப் பைக்குள் வைக்கப்படும் நிலை உருவாகியுள்ளது.

மருந்துப் பொருள்களின் விலைவாசிகளைக் குறைப்பதற்குரிய வழியைக் காண்பதற்காக பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டுமென சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். விசேட வைத்திய நிபுணர்களிடம் இருந்தும் இது தொடர்பாக ஆலோசனை பெறப்படலாம்.

கிராமப்புற வைத்திய சாலைகள் பெருமளவில் செயலிழக்கும் ஆபத்து காணப்படுகிறது. மாகாண சபைகள் இதுவிடயத்தில் தமது பங்கை செலுத்துவதாக இல்லை.

இந்தச் சபைகள் மக்களின் உயிருடன் விளையாடுவதற்கு அனுமதிக்கப்படலாகாது. மாகாணங்களிலும், கிராமப் புறங்களிலும் இருக்கும் வைத்தியசாலை நடவடிக்கைகளை மத்திய அரசு பொறுப்பேற்க வேண்டும்.

மருத்துவ தாதியர்தொழிற் சங்கங்களுக்கிடையே முரண்பாடுகள் மோதல்களாகியுள்ளது. மாகாண சபைகளின் கீழ்வரும் மருத்துவத் தாதியர் தொழிற்சங்கம் ஏனைய மருத்துவத் தாதியர் தொழிற் சங்கங்களுடன் முரண்பட்டு நிற்கும் நிலை காணப்படுகிறது.

மருத்துவத் துறையைப் பொறுத்து 12,304 மருத்துவத் தாதியர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் ஒரு தசாப்தத்திற்கு மேலாகியும் இந்த இலக்கு எட்டப்படவே இல்லை. மற்றைய தர ஊழியர்களைப் பொறுத்தவரையிலும் கூட இதே நிலைதான் நீடிக்கின்றது.

வளர்ந்து வரும் சனத்தொகைப் பெருக்கத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்வகையில் அமைச்சு திட்டமிட்டு செயற்படுதல் வேண்டும்.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு
1954.07.02

உதிர்வு
1993 11.23

அமரர்
**தங்கராசா ஜெயக்குமார்**
(பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை வங்கி, பருத்தித்துறை)

23-11-93 அன்று மரணமெய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட வங்கி ஊழியர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பி ஆறுதல் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் 23-12-1993 வியாழக்கிழமை நடைபெற இருக்கும் அந்தியேட்டி, சபிண்டீகரண கிரியைகளிலும் கலந்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறும் அன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

ஞானாசாரியார் வீதி,
துன்னாலை,
கரவெட்டி.
22-12-1993.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், உறவினர்கள்.
(6965)

## ஓராண்டு நினைவஞ்சலி



**இராமச்சந்திரன் சுரேஷ்**
(புதுக்குடியிருப்பு சிறி துர்க்கா பாமசி உரிமையாளர்)

அன்னை மடியில் 29 - 09 - 1968
அரக்கர் பிடியில் 02 - 01 - 1993

திதி: 22-12-1993 நவமி

பாசத்துடன் மனைவி அங்கு நின்று
பாதை வழி பார்த்திருக்க,
பாலகன் உன் மைந்தன் உனை
பற்றுடனே காத்திருக்க,
பற்றுள்ள தாய் தந்தை
சகோதரர்கள் பதைத்திருக்க
உற்றார் உறவினர் நண்பர்
சுரேஷ் உனை காத்திருக்க
பதை பதைக்க உனை அங்கு
கொடும் பாதகர்கள் கொன்றனரோ,
செங்கடலாம் கிளாலியிலே - உன்
செங்குருதி கலந்ததையா
உயிர் குடிக்கும் கடலில் உந்தன்
உயிரே பலி ஆனதையா!

அன்புத் தெய்வத்தை கொடும்
அரக்கர்கள் அழித்தனரே
பாசத்தின் இருப்பிடத்தைப் பொல்லாப்
பாதகர் அழித்தனரே
எத்தனையோ உயிர்களுக்கு - பேர்
உதவியாக நீ இருந்தாய்
அதனால்தான் ஆண்டவனும் - உனை
அரவணைத்தான் தனது பதம்
நின் பிரிவால் நாம் வாடி நிதம்
நிற்கின்றோம் நாளெல்லாம்
நிம்மதியாய் உனதான்மா சாந்தி பெற
தினம் நெஞ்சுருகி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் வாடும்
மனைவி, மகன், தாய்,
தந்தை, சகோதரர்கள்.
(6946)

## ஆண்டு ஒன்றின் அகலா நினைவேடு

ஆழ்கடல் கிளாலியில் அரக்கர் கொடுமையில்
ஊழ்முடிந் தகன்றனை உன்பெயர் வாழும்!



உருவாய்
16.05.1951

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
03 - 03 - 1975

வீரச்சாவு:
22 - 12 - 1990

ஊழ்முடிந் தகன்றனை உன்பெயர் வாழும்!



உருவாய்

16.05.1951

அருவாய்

02.01.1993

திதி:

22.12.1993

## அமரர் சதாசிவம் பாலசுப்பிரமணியம்

(கொடிகாமம், சரஸ்வதி பேக்கரி உரிமையாளர்)

கடலரக்கர் கொடுமையிலே
கண்மணியே உனையிழந்து
கருவிழிகள் நீராகி ஆண்டொன்று!
சடமாக எமையெண்ணிச்
சதியாற்றும் சண்டாளர்
சடுதியெனச் சரிந்தார்கள் புலிவென்று!
புடம்போட்ட தங்கம் உன்
புகழ்கூறி வாழ்த்துகிறோம்!
புயலொன்று வீசும்எம் மண்மீளும்
படமாகிப் போயெங்கள்
பதிவாட ஆனாயே!
பலகாலம் உந்தன் பேர்வாழும்!

ஓயாது உழைத்த உத்தமனே நாமுமக்கு
காயாத கண்களுடன் அஞ்சலித்தோம்!
சாயாத குன்றே! எம் சரியாத சரித்திரமே!
மாயாது உம்நாமம் மலர் சொரிந்தோம்!

ஊராள்வோர் கொடுந் தொழிலால்
உவர்கடலில் உயிரிழந்த
சீராளர் அனைவருக்கும் — எம்
சிரந்தாழ்ந்த அஞ்சலிகள்!

இன்று (22-12-93) எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி அஞ்சலிக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- மனைவி, பிள்ளைகள்.

பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.
22-12-1993

(சி-8175)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
03 - 03 - 1975

வீரச்சாவு:
22 - 12 - 1990

### வீரவேங்கை ரதிகலா
### (கனகரத்தினம் சுகந்தினி)

குடத்தனை மண் பெற்றெடுத்த களப்புலியே
ரதிகலா இளவயதில் ஈழம் கண்டிட
எதிரிகளை அழித் தொழித்த ரதிகலாவே
கட்டுவனில் ஈழத்தை மிதிக்கவென
வந்த எதிரிகளை கொன்றொழித்த
களப்புலியே ரதிகலா.

அன்றைய தினம் இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும் 3-ம் ஆண்டு நினைவஞ்சலி பூக்களை சமர்ப்பிக்கின்றோம்.

வே. ஐயாத்தும்பி
குடும்பத்தினர்

குடத்தனை வடக்கு

(6952)

---

## 3-ம் ஆண்டு நினைவில் நீ



மலராக:
1972-03-28

விதையாக:
1990-12-22

### வீரவேங்கை ஸ்ராலின்
### (துரைரட்ணம் பகீரதன்)

விதையானாய் மண்ணில் என்றும்
நிலையானாய் எம் நெஞ்சில்
கொடும்பகை முடிக்க எழுந்த வீரனே
பகீர்... உனை எப்படி மறப்போமடா.

170/2, கண்டி வீதி,
அரியாலை.

(6916)

உன்பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

---

அன்புத் தெய்வத்தை கொடும்
அரக்கர்கள் அழித்தனரே
பாசத்தின் இருப்பிடத்தைப் பொல்லாப்
பாதகர் அழித்தனரே
எத்தனையோ உயிர்களுக்கு - பேர்
உதவியாக நீ இருந்தாய்
அதனால்தான் ஆண்டவனும் - உனை
அரவணைத்தான் தனது பதம்
நின் பிரிவால் நாம் வாடி நிதம்
நிற்கின்றோம் நாளெல்லாம்
நிம்மதியாய் உனதான்மா சாந்தி பெற
தினம் நெஞ்சுருகி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் வாடும்
மனைவி, மகன், தாய்,
தந்தை, சகோதரர்கள்.

(6946)

---

பூநகரி சமரில் சரித்திரம் படைத்த

## காவிய நாயகன்



பிறப்பு:
26-08-70

வீரச்சாவு:
11-11-93

### கடற்புலி கப்டன் செங்கண்ணன்

(ஜேக்கப்) அவர்களின்

41-ம் நாள் நினைவு நிகழ்வில்
எங்கள் கண்ணீர்ப் பூக்களை
சமர்ப்பிக்கின்றோம்

அலைகள் பொங்கும் கடலின் மீது
அணிவகுத்த செங்கண்ணா - தமிழ்க்
கலைகள் கொஞ்சும் ஈழ மண்ணினை
காக்கச் சென்ற கமலின் புகழ் வாழியவே

நம் தமிழர் உயிர்களினை நாயாய் எண்ணி
நாகரீகம் அற்றவர்கள் அழித்த போது
வெந்தணல் போல் வெடித்தெழுந்த செங்கண்ணா
ஏரோணி வசந்தாவின் கண்மணியாய் வந்துதித்து
இரண்டாண்டு வீறுடனே களமதனை காத்தமைந்தா
உன் உடலை காணாது உணர்விழந்த வேளையிலே
கடலிலே சங்கமித்த கதையதனை கேட்டு நின்றோம்
விடுகதையாய் கடுகதியாய் மறைந்த முத்தே.

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

படித்த மகளிர் திட்டம்,
அக்பர் வீதி,
மிருசுவில்.

அன்பு அப்பா, அம்மா,
சகோதரர், உற்றார்,
உறவினர்.

மு. கு. 22-12-93 இன்று எமது இல்லத்தில் நடக்கும் ஆத்மசாந்தி நிகழ்வில்பங்கு கொண்டு, மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பர்களையும், போராளிகளையும் அழைக்கின்றோம். (6944)

# இடம் பெயர்ந்தோருக்கான உணவுமுத்திரைவரவில்லை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயாந்தவர்களுக்கான மார்கழிமாத உலர் உணவ முத்திரை இன்னமும் இங்குவந்து சேரவில்லை என யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்துள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்ட உலர் உணவு முத்திரை சென்ற மாதத்துடன் முடிவடைந்துள்ளது எனவும் அடுத்த சட்ட உலர் உணவு முத்திரை தற்சமயம் இங்குள்ள கப்பல்கள் கொழும்பு சென்று திரும்பும் போதே இங்கு எடுத்துவரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதனால் உலர் உணவு விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து சென்ற மாதம் வழங்கப்பட்ட உலர் உணவு முத்திரையின் அடிக்கட்டையைச் சமர்ப்பித்து மார்கழி மாதத்தின் முதல் இரண்டு வாரங்களிற்கான கொடுப்பனவுகளை வழங்க யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி நடவடிக்கை எடுத்துவருகின்றது. (பா)

## கிளிநொச்சி நோக்கி ஷெல் வீச்சு

ஆனையிறவுமுகாமிலிருந்து கடந்த ஞாயிறு மாலை கிளிநொச்சி நோக்கி பலத்த எறிகணை தாக்குதல் நடத்தப்பட்டது மாலை 6 00 மணியிலிருந்து ஒரு மணி நேரம் இத்தாக்குதல் தொடர்ச்சியாக நடத்தப்பட்டது.

பின்பு இரவு 10.30 மணி முதல் இடையிடையே எறிகணை வீச்சு நிகழ்ந்தது.

## பாண் விலை குறைப்பு

(பருத்தித்துறை)

பாவனையாளர்களின் நன்மைகருதி புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாணின் விலையை 50 சதத்தால் குறைத்துள்ளது. இது வரை 8 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த தரமான 350 கிராம் பாண் கடந்த வாரம் முதல் 7.50சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது இதனால் பாவனையாளர்கள்புலோலிப.நோ.கூ. சங்க பேக்கரிப் பாணைத் தேடிவாங்கி வருகின்றனர் (25)

## காய்ச்சலினால் மரணம்

(தென்மராட்சி)

காய்ச்சலினால்பீடிக்கப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர் நேற்று சாவகச்சேரி மருத்துவமனையில்மரணமானார்

கொடிகாமம் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த நி கந்தவனம் (வயது 65) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார். தென்மராட்சிப் பகுதியில் மிக அண்மைக் காலத்தில் காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட மரணமான மூன்றாவது நபர் இவராவார். (86)

## 'சுகவாழ்வு' சஞ்சிகை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையினால் யுனிசெப்பின் உதவித்திட்ட நகர்ப்புற அடிப்படை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ''சுகவாழ்வு'' என்கின்ற கால் ஆண்டு சஞ்சிகைஒன்று வெளியிடப்படவுள்ளது.

மிகவிரைவில் வெளியிடப்படவுள்ள இச் சஞ்சிகையில் சுகாதார சேவை சம்பந்தமான பல கட்டுரைகள் உள்ளடக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் தரித்து நிற்கும்

## சகல கப்பல்களையும் உடன் திரும்ப பணிப்பு

(வடமராட்)

வடக்கில் தரித்து நிற்கும் கப்பல்களைவிரைவில் கொழும்புக்குத் திரும்புமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர்நாயகம் கப்பல் கப்டனுக்கு அவசர பணிப்புரையை விடுத்துள்ளார்.

வடக்கே வந்த கப்பல்கள் திருப்பி வருவதில் ஏற்படும் அதிக தாமதத்தினால் கப்பல் சேவைகள் பாதிக்கப்படுவதாகவும் எதிர்வரும் வியாழனுக்குள் சகல கப்பல்களையும் கொழும்பு துறைமுகத்திற்கு வந்துசேருமாறும் ஆணையாளர் நாயகம்அறிவித்துள்ளார் (யோ)

## கலைப் பட்டப்படிப்பிற்கு நூல்கள் தருவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை நூலகத்திற்கு கலைப்பட்டப்படிப்பை மேற்கொள்பவர்களுக்கு பயன்தரக்கூடிய ஓரளவு நூல்கள் எடுத்து வரப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கலைப்பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு தேவையான வேறு நூல்களைக் கொள்வனவு செய்யவுள்ளதாகவும் அதற்கு நூல்களின் பெயர்ப்பட்டியல் கிடைக்கும் பட்சத்தில் அவற்றை கொள்வனவு செய்ய வசதியாக இருக்குமெனவும் தெரிவித்தார். (பா)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் திடீர் சுற்றிவளைப்புகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் திடீர் திடீரென கிராமங்கள் சுற்றி வளைக்கப்படுவதும் பொதுமக்கள் கைது செய்யப்பட்டு முகாம்களுக்கு கொண்டு செல்லப்படுவதும் அதிகரித்து வருகின்றன.

கடந்த 17ஆம் திகதி அன்று அதிகாலை 5 மணியளவில் மட்டக்களப்பு 13ஆம் கிராம சிறிலங்கா இராணுவத்தினரால் நெடியவெட்டை புளியடிப்பிட்டி கிராமம் திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்டது இதன்போது அதேயிடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் பெற்றோரான வடிவேல் மற்றும் டெல்சிராணி வடிவேல் ஆகிய இருவரையும் கைதுசெய்த இராணுவத்தினர் தமது முகாமிற்கு இவர்களைக் கொண்டு சென்றனர்.

மீண்டும் இரவு 8.00 மணியளவில் பாலையடி வெட்டை இராணுவத்தினர் அதே கிராமத்தைச் சுற்றிவளைத்து ஒரு பொதுமகனைக் கைது செய்தனர். இவ்வாறு கைதானவர் நெடியவெட்டையைச் சேர்ந்த தியாகராசா ஈசன் (வயது 18) எனத் தெரியவந்துளளது. இவர்கள் மூவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.


# அறிவித்தல்

## வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (மட்டுப்படுத்தப்பட்டது)

பிராந்திய முகாமையாளர் மக்கள் வங்கி யாழ்ப்பாணம் அவர்களின் அறிவுறுத்தலின் பிரகாரம், 1967/68ம் ஆண்டு விவசாயக் கடன் தொடக்கம் 1978-ம் ஆண்டு விவசாயக் கடன்வரை வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் மூலம் விவசாயக் கடன்பெற்ற விவசாயிகள் மீதியாக உள்ள கடன் தொகையை 31. 03. 94-க்குமுன் முழுதாகச் செலுத்தினால் எவ்வித வட்டியும் அறவிடப்படமாட்டாது. ஆகவே கடன், மீதியாகச் செலுத்த வேண்டியவர்கள் வேலணை ப நோ. கூ. சங்கத்துடன் தொடர்புகொண்டு 31.03.94க்கு முன் கடனை மட்டும் செலுத்தவும். செலுத்தும் பட்சத்தில் வருங்காலத்தில் வழங்கப்படும் விவசாயக் கடன்களைப் பெறஉரித்துடையவர்களாகின்றீர்கள் என்பதை அறியத்தருகின்றோம்.

நன்றி



## புலமைப் பரிசிற் பரீட்சையிற் சாதனை

யா-கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலய மாணவன் கருணானந்தம் தினகரன் (கோபு) 1993 ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சையில் 183 புள்ளிகளை ஈட்டிச் சித்தியடைந்ததுடன், கரவெட்டிக் கோட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்ற சாதனையையும் நிலை நாட்டியுள்ளார்.

வாழ்த்துகிறோம்

மாணிக்கவாசகர் வித்தியாசாலை பழைய மாணவர்கள்

கரவெட்டி (5867)


ஆழியிலே அணைந்த எங்கள் அகல் விளக்கினக நினைவிருத்தி....

கலங்கும் நெஞ்சங்களின்....

## 1-ம் ஆண்டு நினைவுக் கலசம்



## ஓராண்டு நினைவலைகள்

### இராமச்சந்திரன் சுரேஷ்

எனதன்பு நண்பனே - சுரேஷ்!

அவசரம் என்று சொல்லிச் சென்றாயடா
நீ சென்ற இடம் தான் ஏதடா
ஆண்டு ஒன்று ஆகியும் விட்டதடா
உனை எங்கு தேடியும் காணோமடா
உன் பிரிவை நான் நினைத்து

## நெஞ்சம் நெகிழும் முதலாவது ஆண்டு நினைவஞ்சலி





அமரர்

## உயர்திரு. செல்லையா சுப்பிரமணியம்

(இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்)

அவனியில் உருவாக: 03. 03 1928

ஆழியில் திருவாக: 02. 01. 1993

திதி: 22 12. 1993

அந்தக் கொடுமை இங்கு நடந்து
ஆனது ஆண்டு ஒன்று-
சிந்திய ரத்தம் காய்ந்திடவில்லை
சிந்தனை அகன்றிடவில்லை
சுந்தரத் தமிழர் உடல்களை கிளாலியில்
சூதர்கள் வெட்டிச் சுட்டு
அந்தரஞ் செய்த கொடுமை நடந்து
ஆனது ஆண்டு ஒன்று!

பெருமைகள் பெற்றே நாங்கள் வாழப்
பெரும்பணி செய்த தந்தை
அருமைகள் போற்றி அகலா நினைவால்
அஞ்சலி ஈந்தோம் வாழி!
திருமகன் நாமம் செகத்தினில் வாழும்!
தீயவர் படைகள் ஓடும்!
கருமுகில் அகலும் கயமைகள் நீங்கும்!
கண்ணீர் கதைபல சொல்லும்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(02. 01, 1993 கிளாலி கடற்பிராந்தியத்தில் கொடியவரால் உயிர்நீத்த அனைத்து மக்களுக்கும் எம் அஞ்சலிகள்)

உங்கள் ஆத்ம சாந்திக்காக தினமும் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.

கண்டி வீதி,
கொடிகாமம்.
1993 - 12 - 22

(சி-8176)

---

ராால் நெடியவெட்டை புளிய டிப்பிட்டி கிராமம் திடீரெனச் சுற்றிவளைக்கப்பட்டது இதன்போது அதேயிடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் பெற்றோரான வடி சேர்ந்த தியாகராசா ஈசன் (வயது 18) எனத் தெரியவந்துள்ளது. இவர்கள் மூவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

## ஓராண்டு நினைவலைகள்
## இராமச்சந்திரன் சுரேஷ்

எனதன்பு நண்பனே - சுரேஷ்!

அவசரம் என்று சொல்லிச் சென்றாயடா
நீ சென்ற இடம் தான் ஏதடா
ஆண்டு ஒன்று ஆகியும் விட்டதடா
உனை எங்கு தேடியும் காணோமடா
உன் பிரிவை நான் நினைத்து
என் மனமோ துடிக்கையிலே
உன் மனைவி மகன் தன்னை
என் சொல்லி ஆற்றிடுவேன்

உன் ஆன்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும்

நாதன் அண்ணை
உரிமையாளர்:- நாதன் பாமசி
கல்வியங்காடு

(6947)

---

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
23 - 4 - 1937

மறைவு
26 - 12 - 1990

திதி:
22.12.1993

அமரர்

## திருமதி மகேஸ்வரி தங்கவேல்

(இளைப்பாறிய ஆசிரியை யா/ அச்சுவேலி மகாவித்தியாலயம்)

அம்மா,
அன்பின் பிறப்பிடமே, பண்பின் உறைவிடமே, பாசத்தின் ஒளிவிளக்கே, குடும்பத்தின் திருவிளக்கே, எம் உயர்ச்சிக்காக உன்னத வாழ்விற்காக உங்களையே அர்ப்பணித்தீர்களே, நாம் உயர்ந்து உன்னதமாக இருக்கும் போது நீங்கள் எங்களுடன் இல்லையே அம்மா.

நீங்கள் மறைந்து மூன்று ஆண்டு என்ன, முன்னூறு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டகலா.

உங்கள் ஆத்மாசாந்தியடைய எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகிறோம்.

நாவற்காடு,
அச்சுவேலி.

(6956)

கணவன், பிள்ளைகள்,
உறவினர்

---


மாணவர்கள் ... பழைய மாணவர்கள்

சுரவெட்டி

(5867)

---

## நெஞ்சம் நெகிழும் முதலாவது
## ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
26-04-1926

மறைவு
02 01-1993

திதி : 22-12-1993

நவக்கிரி புத்தூரைச் சேர்ந்த

அமரர்

## உயர்திரு. இராசசிங்கம் செல்லத்துரை

கீழவர் செய்கையால்
கிளாலியில் உறங்கினீர்
நீர் உறங்கி ஓராண்டிற்குள்
உம்மை உறங்க வைத்தவர்
உருக்குலைந்து போனார்கள்
கொடுமைகள் முடியும்
கொடி அது உயரும்
அதுவரை அமைதி கொள்ள
நீர் விரும்பிப் பூசித்த நவக்கிரி
ஸ்ரீ மாணிக்க விநாயகரை
நெஞ்சுருகி பிரார்த்திக்கின்றோம்
சாந்திக்காக.

இன்று எமது இல்லத்தில் இடம்பெறும் ஓராண்டு திதிக் கிரியையில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

எல்லாளன் சனசமூக நிலைய
அருகாமை,
நவக்கிரி,
புத்தூர்.

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
உறவினர்.

(6962)

## சிந்தனைக்கு

நண்பனுக்காக உயிரைக் கொடுப்பது கூட எளிது ஆனால் உயிரைக் கொடுப்பதற்குரிய நண்பன் கிடைப்பதுதான் அரிது-

- கதே

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22-12-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

# "ஜனநாயகம்" காக்க கடத்தல்கள்

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் தமது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கென எந்தவித நடவடிக்கைக்கும் தயாராக இருப்பதையே தென்னிலங்கையில் அண்மைக்காலமாக இடம் பெற்று வரும் சம்பவங்கள் உணர்த்துகின்றன. இதில் இறுதியானது மத்திய மாகாண சபையில் ஐ. தே. கட்சி முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் இ. தொ. கா. உறுப்பினர் ஏழு பேர் கடத்தப்பட்டுள்ளமையாகும்.

இக்கடத்தப்பட்ட ஏழு இ. தொ. கா. உறுப்பினர்களும் அதன் தலைமைப் பீடத்தினால், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்குமாறு பணிக்கப்பட்டவர்கள். இந்நிலையில் கடத்தல் குறித்து முன்னுக்குப் பின் முரண்பட்ட செய்திகள் வெளிவரினும், இவர்களின் கடத்தலில் ஆளும் ஐ. தே. கவின் கை பின்னணியில் உள்ளது என்பது சொல்லித்தான் தெரிய வேண்டிய அவசியமில்லை,

அவ்வாறு இல்லாது இ. தொ. காவின் பொதுச் செயலாளர் செல்லச்சாமி கூறுவது போன்று ஏழு உறுப்பினர்களும் கடத்தப்படவில்லை, பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளார்கள் என எடுத்துக் கொள்வதானால், ஏன் அவர்களுக்குப் பாதுகாப்பு அவசியமாகியது? எதற்காக அவர்கள் மறைவான இடத்தில் வைக்கப்பட வேண்டும்? அத்தோடு கட்சியின் தலைவருக்குத் தெரியாமல் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய அவசியம் செயலாளருக்கு ஏன் எழுந்தது என்பதும் கேள்விக்குரியவையே.

உறுப்பினர்கள் கடத்தப்படுதல், காணாமற் போதல், மறைத்து வைக்கப்படுதல் பொதுவாகவேஒருஇந்தியபாணிஜனநாயகம் ஆகும். அதாவதுஇந்தியாவில் உறுப்பினர் கடத்தப்படுவதும் பின்னர் கடத்தப்பட்டவர் வெளிப்படுதல், அவர் அரசாங்கக் கட்சியை ஆதரித்தல் என்பதும், இதன்பின்னணியில் பதவி, மிரட்டல், கோடிக்கணக்கான பணம் கைமாறல் என்பவை எல்லாம் வழ

# மாகாணசபைகளை ஒழித்து பணத்தை யுத்தத்திற்குபயன்படுத்துக

-- ஜினதாஸ நியதபாலா

(கொழும்பு)

மாகாணசபை முறையை ஒழித்துக் கட்டுவதுடன் அதற்குச் செலவாகும் பணத்தை யுத்தத்திற்கு பயன்படுத்த வேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜினதாஸ நியதபாலா பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில்,

பிரதேச சபைகள் தொடர்பாக அரசினால் அண்மையில் ஒரு கைநூல் வெளியிடப்பட்டுள்ளது. அதில் வடக்கு கிழக்கு சம்பந்தமாக எதுவுமில்லை. அப்படியானால் வடக்கும், கிழக்கும் இலங்கையிலிருந்து விடுபட்டு விட்டதா?

நாட்டின் காணிகளை மாகாண சபைகளிடம் ஒப்படைக்க முடியாது. 65 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் நிலத்தில் 21ஆயிரம் சதுர கிலோ மீற்றர் வடக்கு கிழக்கு பகுதியிலேயே உள்ளது. 15 சதவீதமான மக்களுக்கு நாட்டின் கணிசமான நிலத்தை எப்படி ஒப்படைக்க முடியும்?

மாகாண சபைகளை எமது கட்சி முன்னர் எதிர்த்தது. மாகாணசபை முறையை எதிர்ப்பதற்காக நாம் ஹர்த்தால் செய்தோம் சத்தியாக்கிரகம் செய்தோம். சிறையும் சென்றோம். ஆனால் இப்போது துட்டகைமுனுக்கள் எல்லாளர்கள் போல் மாறுகிறார்கள். அரசியல் லாபத்திற்காக மக்களைக் காட்டிக் கொடுக்கப் பார்க்கிறார்கள். அரசும் யாரையாவது பிடித்து ஆட்சியில் இருக்கப்பார்க்கிறது. எதிர்க் கட்சிகளும் யாரையாவது பிடித்து ஆட்சிக்கு வரப்பார்க்கின்றன.

யுத்தம் ஒன்றை நடத்துவதானால் அதை உரிய முறையில் நடத்த வேண்டும். அதற்கு போதியளவு நிதி ஒதுக்க வேண்டும். நாமும் எமது சம்பளப்பணத்தை ஆறு மாதத்திற்கு தியாகம் செய்யத் தயார். அரசும் அப்படியே செய்யட்டும்.

குசுகுசு பேச்சுக்களில் அல்லது ரகசிய ஒப்பந்தங்களில் எவரும் ஈடுபடக் கூடாது ஐ தே. க. விடம் பெறவேண்டியதைப் பெற்றுக் கொண்டு எதிர்க்கட்சியிடம் மேலும் பெற முற்படுவோருடன் இணைந்து கொள்ளாதிருப்போமாக எனவும் தெரிவித்தார்.

## வடக்கு கிழக்கு பிரச்சினைக்காக முழுநாடும் துன்பப்படலாமா?

### தினேஷ் குணவர்த்தனா கேள்வி

(கொழும்பு)

வடக்கு கிழக்கில் பிரச்சினை இருக்கிறது என்பதற்காக முழு இலங்கையும் கஷ்டப்பட வேண்டியது அவசியம் இல்லை. எனவேமாகாண சபை முறையை ரத்து செய்யுங்கள். இவ்வாறு மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், மாகாண சபையால் பிரச்சினைகள் எதுவும் தீரவில்லை. பாடசாலைப் பிரச்சினை, ஆஸ்பத்திரிப் பிரச்சினை, கிராம விவசாயிகளின் பிரச்சினை என்று பிரச்சினைகள் நீண்டு செல்கின்றன. இவை தீர்க்கப்படாவிடில் கிளர்ச்சி ஏற்படும். மக்கள் பட்டினியால் சாக முன்பாக வீதியில் இறங்கிப் போராடுவார்கள்.

அரசியல் லாபத்திற்காக மாகாண சபைகள் பயன்படுத்தப்பட்டன. இந்தச் சபைகளால் நாட்டுக்குப் பயன் எதுவும் இல்லை. உபயோகமற்ற இந்த முறையை மாற்ற வேண்டும்.

வடக்கிலும், கிழக்கிலும் மாகாணசபை ஆட்சி இல்லை மாகாண சபைகள் இப்போது காணி அதிகாரங்களையும் கோருகின்றன.

இந்திய அரசின் அரசியலமைப்பை நாம் பின்பற்ற வேண்டியது இல்லை. இலங்கை மற்ற நாட்டின் அரசியலமைப்பைப் பின்பற்றினால் சிக்கல்கள்தான் கூடும். நெருக்கடிகள் அதிகமாகும் என்றும் தெரிவித்தார்.

## ஆயுத இழப்புக்காக மக்கள் மீதே சுமை

### வாசுதேவ குற்றச்சாட்டு

(கொழும்பு)

பூநகரியில் அரசாங்கம் பல ஆயிரக்கணக்கான மில்லியன் ரூபா பெறுமதி வாய்ந்த ஆயுதங்களைப் பறிகொடுத்துள்ளது. இச்சுமையையும் மக்கள் மீதே அரசாங்கம் திணிக்கும் என நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தீர்வு ஒன்று முன்வைக்கப்படாமையினாலே தொடர்ந்து யுத்தம் நடைபெறுகிறது. யுத்தத்தை நடத்துபவர்களே யுத்தத்திற்கான தீர்வை முன்வைக்கவேண்டும் என்றார்.

## தொண்டமானின் சண்டித்தனத்திற்கு இடமளிக்கக் கூடாது

### -ஹேமகுமார நாணயக்கார

(கொழும்பு)

தொண்டமானின் சண்டித்தனத்திற்கு ஆளும் கட்சியோ எதிர்க் கட்சியோ பணிந்து போய்விடக்கூடாது என்று பாராளுமன்றஉறுப்பினரான சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஹேமகுமார நாணயக்கார தெரிவித்தார்.

காணி அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், லயன் அறைகளையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் தோட்டத்தொழிலாளர்களுக்கேசொந்தமாக்க அமைச்சர் தொண்டமான் முயன்று வருகின்றார். இதற்கு துணைபோகக் கூடாது. மலையக காணிகளை இந்திய தோட்டத்தொழிலாளர்களுக்கு வழங்குவதன் மூலம் சிங்கள மக்களின் உரிமையைப் பறிக்கக்கூடாது. தொண்டமானுக்கு ஐ.தே.க. அரசு நமஸ்காரம் செய்தது. தோட்டங்களுக்குள் சிங்களவர் பிரவேசித்தால் அடித்து விரட்டுங்கள் என்று ஜே. ஆர். அன்றுகூறினார். பிரேமதாசாவும் தொண்டமானைத் தாலாட்டினார். இப்போது விஜேதுங்கவுடன் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளதால் தொண்டமான் எதிரணியின் ஆதரவை நாடுகின்றார். தொண்டமானுடன் இணைந்து சிங்கள இனத்தைக் காட்டிக்கொடுக்க யார் முற்பட்டாலும் அவர்களுக்கு சிங்கள மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள். சிங்கள மக்களுக்கு துரோகம் புரிவோரின்புதைகுழியிலும் இடிவிழும் என்றும் தெரிவித்தார்.

## 40 ஆம் ஆண்டு நிறைவுவிழா

யாழ் மாநகரசபை சித்த வைத்திய துறையின் 40 ஆம் ஆண்டு நிறைவு நாள் நேற்று முன்தினம் யாழ்மாநகரசபை சித்தவைத்தியத்துறை மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் யாழ் மாநகரசபை சித்த வைத்தியத்துறையைச் சேர்ந்தவர்கள், யாழ் மாநகர சபை ஆணையாளர் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

மேற்படி யாழ் மாநகர சபை சித்த வைத்தியத்துறை 1953 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## அரசியலிலிருந்து என்னை ஒதுக்கவே பிரேமா தொண்டாவை வளர்த்தார்

### காமினிதிசாநாயகா

(கொழும்பு)

எமது கட்சியான டி.யு. என் எவ் கட்சியும் ஐ.தே. கட்சியும் சேருவது பற்றி பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்தப் பேச்சுவார்த்தைகளால் எந்தவிதமான பலனுமில்லை. நாம் அரசியல் பேரம் பேசுவதற்கு ஐ. தே.க. மட்டும் தான் ஒரு கட்சியல்ல. தொண்டமானுடனும் பேரம் பேசுவதற்கு அழைப்பு விடப்பட்டுள்ளது. அரசியலில் தொண்டமானின் சொற்கள் ஏனையோரின் சொற்கள் போன்று இருக்கமாட்டாது. அவரின் சொற்கள் ஒரு கல்லில் செதுக்கப்பட்ட எழுத்துக்கள் போன்றவை 21ஆம் திகதி இந்த மாகாண சபையின் அதிகாரம் மாறும் என்று அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார் எனகாமினி திசாநாயகா தெரிவித்தார்.

மத்திய மாகாண சபையில் உரையாற்றிய அவர், தொண்டமானைச் சேர்த்துக் கொள்பவர்கள் மக்களால் சுடுகாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் ஒரு தேயிலைச் செடிக்கு உதைத்தால் ஒரு துட்டகைமுனு குதித்தெழும்புவார் என்றும் சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தப் பத்திரிகைகள் கூறுவதை அடிப்படையாக வைத்து திரு. தொண்டமான் முடிவு எடுக்கமாட்டார். தனது மக்களின் நலன் கருதியே அவர் முடிவு செய்வார்.

தொண்டா நீதான்பூமியின் பெரிய மனிதன் என்று சிலர் சொன்னார்கள். தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளைப் பெறவும் அவரை வளர்ப்பதன் மூலம் என்னை அரசியலிலிருந்து தூக்கிஎறியவுமே பிரேமதாசா இவ்வாறு சொன்னார். நான் அமைச்சரவையிலிருந்தும் விலக்கப்பட்டேன் அவர்கள் நினைப்பது போல தனது அரசியல் நிலையை மாற்றும் உரிமை தொண்டமானுக்கு இல்லை.

அத்துடன் வாக்குகள் எங்கிருக்கின்றன என்று கண்டால் பிரேமதாசா எதையும்" செய்வார். 50 ஆயிரம் சீன மக்கள் இங்கிருந்தால் அவர்களுக்கும் பிரஜா உரிமை வழங்குவார். இப்பொழுது பாருங்கள் பெருந்தொகையான ஆடைத் தொழிற்சாலைகளைத் திறந்துள்ளார் என்றார்.

அவ்வாறு இல்லாது இ. தொ. காவின் பொதுச் செயலாளர் செல்லச்சாமி கூறுவது போன்று ஏழு உறுப்பினர்களும் கடத்தப்படவில்லை, பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளார்கள் என எடுத்துக் கொள்வதானால், ஏன் அவர்களுக்குப் பாதுகாப்பு அவசியமாகியது? எதற்காக அவர்கள் மறைவான இடத்தில் வைக்கப்பட வேண்டும்? அத்தோடு கட்சியின் தலைவருக்குத் தெரியாமல் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய அவசியம் செயலாளருக்கு ஏன் எழுந்தது என்பதும் கேள்விக்குரியவையே.

உறுப்பினர்கள் கடத்தப்படுதல், காணாமற்போதல், மறைத்து வைக்கப்படுதல் பொதுவாகவேஒருஇந்தியபாணிஜனநாயகம் ஆகும். அதாவதுஇந்தியாவில் உறுப்பினர் கடத்தப்படுவதும் பின்னர் கடத்தப்பட்டவர் வெளிப்படுதல், அவர் அரசாங்கக் கட்சியை ஆதரித்தல் என்பதும், இதன்பின்னணியில் பதவி, மிரட்டல், கோடிக்கணக்கான பணம் கைமாறல் என்பவை எல்லாம் வழமையான சம்பிரதாயங்கள்-

ஆனால், அண்மையில் சிறிலங்கா அரசியலிலும் உறுப்பினர் கடத்தல் தீவிரமாகியுள்ளது, அண்மையில் எதிர்க்கட்சிகளின் ஆட்சியில் இருக்கும் தென்மாகாண சபை உறுபபினர் ஒருவர் கடத்தப்பட்டார். தற்பொழுது மத்திய மாகாண சபையில் இடம் பெற்றுள்ளது. இது சிறிலங்காவின் ஜனநாயக அமைப்பு சீர்கெட்டுப் போயுள்ளதை வெளிப்படையாகக் காட்டும் அம்சமாகும்.

ஆனால், சிறிலங்காவின் ஜனநாயகம் தற்பொழுது தான்சீர்கெடத்தொடங்கியுள்ளதுஎனக்கூறிவிட முடியாது. சிறுபான்மை இன மக்களின் அடிப்படை உரிமைகளை சிறிலங்கா அரசு எப்பொழுது மறுக்கத் தொடங்கியதோ அப்பொழுதே சிறிலங்காவில் ஜனநாயகம் சீர்கெடத் தொடங்கி விட்டது எனலாம். அவ்வாறானால் எப்பொழுதாவது சிறிலங்காவில் ஜனநாயகம் இருந்ததா? என்று கேள்வி எழுபபுவதும் நியாயமானதே.

இதேவேளை, இதில் யார் யார் எந்தளவு பங்களிப்புச் செய்தனர் எனக்கூறிவிட முடியாது, ஆனால் இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமது பங்களிப்பை நல்கியிருந்தன என்பது மட்டும் உண்மை, அதிலும் குறிப்பாக 1977க்குப் பின் வந்த ஐ- தே- கட்சியின் பங்களிப்பு சற்றுப் பெரிதாகவே இருந்துவந்துள்ளது.

இவ்விடயத்தில் 1977க்குப் பின் ஆட்சிக்கு வந்த ஐ- தே- கட்சி தலைவர்கள் மூவரும் ஒருவரை ஒருவர் மிஞ்சியவராகவே காணப்பட்டனர்- ஜே- ஆர். ஜெயவர்த்தனா தேர்தல் மோசடி செய்யவென வடக்கிற்கு அமைச்சர்களையே அனுப்பினார் என்றால், பிரேமதாசாவோ பல பகுதிகளில் மக்கள் வாக்களிக்காமலே தேர்தலை நடத்தி முடித்து சாதனை புரிந்தார், தற்போதைய ஜனாதிபதியோ மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளையே கடத்திச் சென்று விடுபவராக உள்ளார்,

அதாவது, தென்னாசியாவிலேயே ஜனநாயக பாரம்பரியம் கொண்ட நாடு என பெருமை பேசப்படும் சிறிலங்காவில், மக்களின் பிரதிநிதிகள் கூட சுதந்திரமாக நடமாட முடியாத நிலையே இன்று நிலவுகின்றது. எந்தளவிற்கு ஜனநாயகமும், அதன் பாரம்பரியமும் போற்றப்படுகின்றது என்பதையும் எவரும் புரிந்து கொள்ளலாம்- ஆனால் அன்று தமிழ் மக்களுக்கு, எதிராக ஜனநாயக விரோதச் செயல்களில் அரசு ஈடுபட்டபோது கைகட்டி நின்றதோடு, அநேகவேளைகளில் அரசை ஆதரித்தமையாலும், இன்று தமக்குஎதிரான ஒரு சூழ்நிலை உருவாகி வருகின்ற போதும் அதனை எதிர்க்க எதிரணியினருக்கு வழி தெரியாமல் போய்விட்டது கவலைக்குரிய விடயம் தான்-

---

கள் எல்லாளர்கள் போல் மாறுகிறார்கள். அரசியல் லாபத்திற்காக மக்களைக் காட்டிக் கொடுக்கப் பார்க்கிறார்கள். அரசும் யாரை

... த்தப்பட்டன. இந்தச் சபைகளால் நாட்டுக்குப் பயன் எதுவும் இல்லை. உபயோகமற்ற இந்த முறையை மாற்ற வேண்டும்.

## ஆயுத இழப்புக்காக மக்கள் மீதே சுமை

### வாசுதேவ குற்றச்சாட்டு

(கொழும்பு)

பூநகரியில் அரசாங்கம் பல ஆயிரக்கணக்கான மில்லியன் ரூபா பெறுமதி வாய்ந்த ஆயுதங்களைப் பறி கொடுத்துள்ளது. இச்சுமையையும் மக்கள் மீதே அரசாங்கம் திணிக்கும் என நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தீர்வு ஒன்று முன்வைக்கப்படாமையினாலே தொடர்ந்து யுத்தம் நடைபெறுகிறது. யுத்தத்தை நடத்துபவர்களே யுத்தத்திற்கான தீர்வை முன்வைக்கவேண்டும் என்றார்.

---

கட்சியும் சேருவது பற்றி பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்தப் பேச்சுவார்த்தைகளால் எந்தவிதமான பலனுமில்லை. நாம் அரசியல் பேரம் பேசுவதற்கு ஐ. தே.க. மட்டும் தான் ஒரு கட்சியல்ல. தொண்டமானுடனும் பேரம் பேசுவதற்கு அழைப்பு விடப்பட்டுள்ளது. அரசியலில் தொண்டமானின் சொற்கள் ஏனையோரின் சொற்கள் போன்று இருக்கமாட்டாது. அவரின் சொற்கள் ஒரு கல்லில் செதுக்கப்பட்ட எழுத்துக்கள் போன்றவை 21ஆம் திகதி இந்த மாகாண சபையின் அதிகாரம் மாறும் என்று அமைச்சர் தொண்டமான் கூறியுள்ளார் என காமினி திசா

... தொண்டமானைச் சேர்த்துக் கொள்பவர்கள் மக்களால் சுடுகாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் ஒரு தேயிலைச் செடிக்கு உதைத்தால் ஒரு துட்டகைமுனு குதித்தெழும்புவார் என்றும் சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தப் பத்திரிகைகள் கூறுவதை அடிப்படையாக வைத்து திரு. தொண்டமான் முடிவு எடுக்கமாட்டார். தனது மக்களின் நலன் கருதியே அவர் முடிவு செய்வார்.

தொண்டா நீதான்பூமியின் பெரிய மனிதன் என்று சிலர் சொன்னார்கள். தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளைப் பெறவும் அவரை வளர்ப்பதன் மூலம் என்னை அரசியலிலிருந்து தூக்கிஎறியவுமே பிரேமதாசா இவ்வாறு சொன்னார். நான் அமைச்சரவையிலிருந்தும் விலக்கப்பட்டேன் அவர்கள் நினைப்பது போல தனது அரசியல் நிலையை மாற்றும் உரிமை தொண்டமானுக்கு இல்லை.

அத்துடன் வாக்குகள் எங்கிருக்கின்றன என்று கண்டால் பிரேமதாசா எதையும்" செய்வார். 50 ஆயிரம் சீன மக்கள் இங்கிருந்தால் அவர்களுக்கும் பிரஜா உரிமை வழங்குவார். இப்பொழுது பாருங்கள் பெருந்தொகையான ஆடைத் தொழிற்சாலைகளைத் திறந்துள்ளார் என்றார்.

---

### தேர்தல் ஆணையத்திற்கு

# பல உறுப்பினர்களை நியமிக்கும் சட்டமூலத்திற்கு அங்கீகாரம்

(டில்லி)

தேர்தல் ஆணையகத்தில் பல உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு வகை செய்யும் சட்டமூலத்திற்கு இந்தியப் பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஏற்கனவே மக்களவையால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட இச்சட்டமூலத்தைநேற்றுமுன் தினம் மாநிலங்கள் அவையும் ஏற்றுக் கொண்டது. குடியரசுத்தலைவர் வெளியிட்ட அவசரச்சட்டம் ஒன்றிற்கு பதிலாக இந்தச் சட்டமூலம் தாக்கல் செய்யப்பட்டது. தேர்தல் ஆணையகத்தின் அதிகாரம் முழுவதும் ஒரே நபரிடம் இருக்கக் கூடாது என்ற ஜனநாயகக் கொள்கையின் அடிப்படையிலேயே இச்சட்டம் கொண்டு வரப்படுவதாக சட்டஅமைச்சர் எச் ஆர். பரத்வாஜ் தெரிவித்துள்ளார்.

## பாரதீயஜனதா தலைவர்கள் காவலிலிருந்து விடுதலை

(டில்லி)

பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல் கே அத்வானி அக்கட்சியின் முன்னாள் தலைவர் டாக்டர் முரளிமனோகர் ஜோஷி, உத்தரப்பிரதேச முன்னாள் முதல்வர் கல்யாண்சிங் ஆகியோர் நேற்று முன்தினம் நீதிமன்றக் காவலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அயோத்தியாவில் சர்ச்சைக்குரிய பாபர்மசூதி வளாகம் இடிக்கப்பட்டது தொடர்பான வழக்கில் இவர்கள் காவலில் வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. நீதிமன்றக் காவல் காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, விசேட நீதிமன்ற நீதிபதி விஜே வர்மா இவர்களை விடுவிக்கும்படி உத்தரவு பிறப்பித்தார்.

## கட்சியின் கொள்கைகள் தோல்விக்கு காரணமல்ல

(டில்லி)

அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களில் இமாசலப் பிரதேசம் மற்றும் மத்தியபிரதேச மாநிலங்களில் பாரதீய ஜனதாக்கட்சி தோல்வியுற்றமைக்கு அந்தந்த மாநிலங்களில் ஆட்சியிலிருந்த முன்னைய பாரதீய ஜனதா அரசுகளே காரணமாகும்.

இவ்வாறு பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி கட்சியின் தேசிய செயற்குழுவுக்கு அனுப்பியுள்ள குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். அக்குறிப்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் இந்த மாநிலங்களில் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வி கட்சியின் கொள்கைகளுக்கு ஏற்பட்ட தோல்வியே அல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பாரதீய ஜனதாக்கட்சி மேற்கொண்டு வரும் பாராளுமன்ற நடவடிக்கைகளை பகிஷ்கரிக்கும் இயக்கத்தைக் கைவிடப் போவதாககட்சி பின்துணைத் தலைவர் ஏ. பீ. வாஜ்பாய் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

## புயல் சின்னம் வலுவிழந்தது

(சென்னை)

வங்கக் கடலில் உருவாகியிருந்த புயல் சின்னம் கரையைக் கடப்பதற்கு முன்பாகவே வலுவிழந்து போனதாகவும், அது மேலும் வலுவிழந்து போகும் எனவும் சென்னை வானிலை அவதான நிலையம் கூறியுள்ளது இதனால் இது முன்பு எதிர்பார்க்கப்பட்டதுபோல கரையைக் கடக்காது என்றும் கூறப்பட்டுள்ளது.

## பேட்டி பிரசுரிக்க தடை

முஸ்லிம் தீவிர வாதிகளின் பேட்டிகளை பிரசுரிக்கக் கூடாது என எகிப்து உள்துறை அமைச்சர் அல்பீ தடை உத்தரவு விதித்துள்ளார். வெளிநாட்டில் வசிக்கும் ஜிகாத் தலைவரான ஸவாஹ்ரியுடன் பேட்டி நடத்திய பததிரிகை ஆசிரியர் ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளார்.

## குற்றவாளிகளை திருப்பி அனுப்ப இந்தியா அமெரிக்கா உடன்பாடு

(டில்லி)

குற்றவாளிகளை நாடுதிருப்பி அனுப்ப வகை செய்யும் உடன்படிக்கையின் வாசகங்களை இறுதியாக்குவது தொடர்பாக விவாதிக்க அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் தாம் அமெரிக்கா செல்லத் திட்டமிட்டிருப்பதாக உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பிரிட்டனுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடு போலவே அமெரிக்காவுடனும் உடன்பாடு செய்யப்பட இருப்பதாகவும், பிரிட்டனுடன் செய்யப்பட்ட உடன்பாடு மிகுந்த பயன் அளிப்பதாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அஜ்மீரிலிருந்து விமானம் மூலம் டில்லி திரும்புகையில் விமானத்தில் பி. ரி. ஐ. செய்தியாளரிடம் பேசிய அவர், கனடாவுடனும், வேறு சில ஐரோப்பிய நாடுகளுடனும் இத்தகைய உடன்படிக்கை செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் உள்துறை அமைப்பு காஷ்மீரில் மட்டுமன்றி வட கிழக்கு மாநிலங்களின் விவகாரங்களிலும் தலையிடுவதாகவும் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அவர் குறிப்பிட்டார்.

## சட்டம், ஒழுங்கு நிலைபற்றி முதல்வர் உயரதிகாரிகளுடன் பேச்சு

(சென்னை)

சென்னை நகரின் சட்டம், ஒழுங்குநிலைமைதொடர்பாக முதல்வர் ஜெயலலிதா நேற்று முன்தினம் சென்னையில் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார். சுமார் இரண்டரை மணிநேரம் நீடித்த இந்த பேச்சுவார்த்தையின் போது தமிழக அரசின் தலைமைச் செயலாளர் டி.வி.வெங்கட்ராமன், உள்துறை செயலாளர் மலைச்சாமி, காவல் துறை தலைமை இயக்குனர் சிறிபால், உளவுப் பிரிவு இன்ஸ்பெக்டர்ஜெனரல் ஏ எஸ். அலெக்சாண்டர், சென்னை நகர காவல்துறை ஆணையர் ஆர். எஸ். சவாரி ஆகியோர் கலந்து கொண்டதாக தமிழக அரசின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தி. மு. க பொதுக்குழுவை கூட்ட கருணாநிதி முடிவு

வை. கோபாலசாமியை தி. மு. கவிலிருந்து விலக்கியது சரிதானா என கட்சியின் பொதுக்குழு கூட்டத்தை கூட்டி முடிவு செய்யுமாறு விடுக்கப்பட்ட சவாலை கருணாநிதி ஏற்றுள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் கட்சியின்பொதுச்செயலாளர்களை சந்தித்தபின் கருணாநிதி செய்தியாளர்களிடம் பேசினார். ''தலைமை எடுக்கும் முடிவுகளுக்கு பெரும்பான்மை ஆதரவு இல்லை என வெளியான தவறான பிரசாரத்தை முறியடிக்க நான் கட்சியின் பொதுக் குழுவை கூட்ட முடிவு செய்துள்ளேன் என்றார் கருணாநிதி.

டிசம்பர் 29இல் தஞ்சாவூரில் தி.மு க பொதுகுழு கூடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தபால்களை சீராக எடுத்துவர நடவடிக்கை எடுக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாகக் கொழும்பில இருந்து யாழ். குடாநாட்டிற்குரிய தபால்கள் எடுத்துவரப்படாததை அடுத்து யாழ். தபாலக அதிகாரி ஒருவர் கொழும்பிலுள்ள உயர் அதிகாரி ஒருவருடன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கியுள்ளார்

சுமார் எழுபத்தைந்து நாட்களுக்கு மேலாக யாழ்ப்பாணத்திற்கு வெளியூர்க் கடிதப் பொதிகள் எவையும் எடுத்து வரப்படாதமை தெரிந்ததே.

இதனையடுத்து, மேற்படி உள்ளூர்த் தபாலக அதிகாரி ஒருவர், கொழும்பிலுள்ள பிரதம தபாலக நடவடிக்கை அதிகாரி சிவகுல அரசனுடன் தொடர்புகொண்டு தபால் சேவைக்கான சீரான ஒழுங்குகளைச் செய்யும்படி கேட்டுள்ளார்.

வெளியூர்க் கடிதங்கள் நீண்ட நாட்களாக வராத காரணத்தினால் மக்கள்பெரிதும் வேதனை அடைந்துள்ளனர். இந்நிலை தொடராமல் இருப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்யும்படியும் அவர் கோரியுள்ளார்.

இந்தத் தபால்கள் எடுத்து வரப்படாமைக்கான காரணம் இன்னும் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை.

# நாளை றுகுணு கப்பலில் தபால்கள் அனுப்ப ஏற்பாடு

பருத்தித்துறை இறங்கு துறையிலிருந்து நாளை புறப்படவிருக்கும் றுகுணு கப்பலில் தபால்பொதிகளும் ஏற்றிச் செல்லப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இன்று நண்பகலுக்குள் தங்கள் தங்கள்பகுதி தபாலகங்களில் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் தபால்களைச் சேர்க்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதம தபாலகத்தில் நாளை காலை 8.00 மணிக்குள் தபால்களைசேர்க்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

'வாதுவ' கப்பலில் ஏற்றப்படவிருந்த தபால்பொதிகளும் இக் கப்பலிலேயே அனுப்பி வைக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

## உதைபந்தாட்டம்

குருநகர் புனிதயாகப்பர் ஆலய புனர் நிர்மாண நிதிக்காக பாடும்மீன் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டியில் இன்றுமாலை 3.00 மணிக்கு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து றோயல் விளையாட்டுக் கழகமும் 4-00 மணிக்கு விநாயகர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பாடும்மீன் விளையாட்டுக் கழகமும் மோதும் இப்போட்டிகள் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

# பதுங்கு குழிக்குள் புதைந்து 3 வயது சிறுவன் மரணம்

(தென்மராட்சி)

வீட்டு முற்றத்தில் நின்ற வெள்ளத்தில் விளையாடிக் கொண்டிருந்த மூன்று வயதுச் சிறுவன் பதுங்கு குழிக்குள் தவறி வீழ்ந்து பரிதாபகரமாக மரணமான சம்பவமொன்று நேற்று கொடிகாமப் பகுதியில் நிகழ்ந்துள்ளது

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது: முற்றத்தில் நின்ற வெள்ளத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் பதுங்கு குழிக்கு அருகில் சென்ற போது அது இடிந்து வீழ்ந்ததில் அதற்குள் புதையுண்டான் உடனடியாக சிறுவனை மீட்டு சாவகச்சேரி மருத்துவ மனைக்கு கொண்டு செல்லும் போது வழியில் மரணமடைந்தான்.

மேற்படி சம்பவத்தின் போது பலியான சிறுவன் கொடிகாமம் கச்சாய் தெற்கில் வசிக்கும் கணபதி என்பவரின் மகனான நாகதர்சன் (வயது 03) என்பவராவார்

(86)

## ஒய்வூதிய கொடுப்பனவு

காரைநகர் ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கி மூலம் ஒய்வூதியம் பெறுபவர்களின் மார்கழி மாத ஒய்வூதியக் கொடுப்பனவு வழக்கம்பரையில் உள்ள தற்காலிக கிராமிய வங்கி காரியாலயத்தில் இன்று காலை 9-00 - 12-00 மணிவரை நடைபெறும் என பொதுமுகாமையாளர் அறியத் தருகின்றார்.

## தென்மாகாண

ரின் வீட்டில் இருந்த பெண்மணி ஒருவர் இது உண்மையென ஒத்துக் கொண்டதாக சந்தேசிய தெரிவித்தது.

இவரின் இராஜினாமாவை தொடர்ந்து இந்த பதவிக்கு யார் நியமிக்கப்படுவர் என்பது குறித்து தெளிவாக தெரியவில்லை என்றும், இருந்த போதிலும் பெரும்பாலும் டங்கன் ஜெயவர்தனா இப்பதவிக்கு நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது

## முன்கோடை

மம் வட்டுக்கோட்டைக்கும் அராலிக்கும் இடைப்பட்ட தாழ்ந்த பகுதியில் அமைந்துள்ளது.

தொடர் மழையினால் வெளித்தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்ட நிலையில் இக்கிராமம் வெள்ளத்தில் மூழ்கியது. இதனால் இக் கிராமத்தில் வசித்த 30 பேரையும் மீட்க முடியாத நிலை காணப்பட்டது பொதுமக்களினதும் உதவி அரசாங்க அதிபர் மற்

## டி. பி. விஜேதுங்க

யுள்ளது என்று நான் கூறியுள்ளேன்

கேள்வி; தமிழர் இலங்கையின் ஒரு பகுதியானவர்கள் என்பதை ஐ.தே.க சரியாக புரிந்து கொள்ளவில்லை என நீங்கள் கூறிவருவதுபோல் தெரிகிறது. இப்போது ஐ.தே.க சிங்கள தீவிரவாதிகளின் பேச்சை கேட்கின்றனர். இலங்கை தமிழரை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்றும் நீங்கள் கூறிவருகிறீர்கள் இதன் அர்த்தம் என்ன?

பதில்; நாம் இத்தனைவருடம் ஐ.தே.கவுடன் இணைந்து செயற்பட்டாலும் கூட இதுவரை இந்திய வம்சாவளி மக்கள் இந் நாட்டின் பிரஜைகளாகிவிட்டனர். மற்றவர்களுக்கு செய்வதுபோல் அவர்களுக்கும் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. இதனாலேயேஅதன் போக்கு நமக்கு பிடிக்கவில்லை. அதை வற்புறுத்திய போது தான் இன்றைய சூழ்நிலை ஏற்பட்டது.

கேள்வி; பிரதமர் ரணில் தற்போது கூட்டணிக்கு ஏற்பட்ட பிரச்சினையை தீர்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார். தாங்களும் அதில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறதே?

பதில்; நானும்குறிப்பிட்ட விடயங்களை அவரிடம் பேசவில்லை பிரச்சினையைஎப்படி தீர்க்கலாம் என்ற ஓர் அடிப்படையிலேயே பேசுகிறோம் அதில் எமக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதை நாம் ஜனாதிபதிக்கு தெரிவித்து அதன்பின் ஓர் உறுதியான முடிவு எடுக்கப்படும்.

கேள்வி: தென்பகுதி சிங்கவர்களுக்கு நீங்கள்

## யாழ். பல்கலை

பெருமைவாய்ந்த பூநகரிசமர் 'தவளை' நடவடிக்கை இடம் பெறுகிறது. அத்துடன் தமிழீழத்தில் சிறிலங்கா விமானப் படையால் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சின் அழிவுகள், மாவீரர் நாள் நிகழ்வுகள் என்பவற்றுடன் வழமையான அம்சங்களும் இடம் பெறுகின்றன.

## அவைத்

பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அவைத் தலைவர் தள்ளுபடி செய்தார் இது ஒரு ஜனநாயக விரோதச் செயலாகும் முதல் அமைச்சர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவருவது தொடர்பாக மனு தாக்கல் செய்யப்பட்ட போதே தவறான முறையில் கொண்டு வரப்பட்டிருந்தால் அதனைத் தள்ளுபடி செய்திருக்க வேண்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா தங்கம்மா

புங்குடுதீவு வரதீவு 7-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி கந்தையா தங்கம்மா 09-12-93-ல் புங்குடுதீவில் காலமானார். இவர் காலம்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் வீரசிங்கம், தேவராசா, சிவபாக்கியம், இரத்தினபூபதி, பரமலிங்கம் (அம்பாள் களஞ்சியம்) நெடுங்கேணி, நவமணிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்லம்மா (நயினாதீவு), இராசம்மா பங்கயற்செல்வி, வேலாயுதம், இளையதம்பி, சந்தானலெட்சுமி, பாலசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். இறுதிச்சடங்குகள் புங்குடுதீவில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்: க. வீரசிங்கம் [மகன்]

45, செழியன் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (6981)

## தாமோதரம் சின்னராஜா

தாமோதரம் சின்னராஜா அவர்கள் 21-12-1993 அன்று கொழும்பில் மரணமானார். அன்னார் சுசிலா தேவியின் அன்புக் கணவரும் ரமேஷ், வத்சலா, சுபத்ரா, அகல்யா, கஸ்தூரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

வத்சலா
இருபாலை. (மகள்)
(6980)

## திருமதி மயிலு சிவக்கொழுந்து

அல்வாய் தெற்கு முள்ளாவத்தை ''சிவமலர் வாசா'' வைச் சேர்ந்த திருமதி மயிலு சிவக்கொழுந்து 20-12-93 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற முருகர் வள்ளியின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மயிலுவின் அன்பு மனைவியும், திருமதி குலரத்தினம்-செல்வமலர் சோதி

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
யாழ்நகர் ஸ்ரீதர் திரையரங்கில்
விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகத்தினரும் நிதர்சனமும் இணைந்து வழங்கும்

சின்ன விழிகள்

தினசரி பி. ப. 4-00 மணி, மாலை 6-00 மணி
சனி, ஞாயிறு காலை 10.30, பி. ப. 2.30, மாலை 4.00, 6.00 மணி
(சி-8181)

அறிவித்தல்
யாழ் மாநகராட்சி மன்றம்
பழைய சஞ்சிகைகள் ஏல விற்பனை

18-12-1993 முற்பகல் 10-00 மணிக்கு நடைபெறவிருந்த மேற்படி ஏல விற்பனை தவிர்க்க முடியாத காரணத்தால் 29-12-1993 புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பின்போடப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
19-12-1993.
மாநகர ஆணையாளர்
யாழ். மாநகரசபை.
(சி-8180

பதவி வெற்றிடம்

வெற்றிடம்:- 01. கணக்காளர்
02. கணக்கு எழுதுநர்
03. எழுதுநர்
04. வெளிக்கள உத்தியோகத்தர்
05. தட்டெழுத்தாளர்

தகைமைகள்:- கணக்காளர் (முன் அனுபவம் உள்ளவராய் இருத்தல் வேண்டும்)
கணக்கு எழுதுநர் (கணக்கியல், வர்த்தகம், பொருளியல்)
எழுதுநர் (க. பொ. த. உயர்தரப் பரீட்சை சித்தி)
வெளிக்கள உத்தியோகத்தர் - (புவியியல்)
தட்டெழுத்தாளர் - ஆண் (க. பொ த. சா|தரம், நிமிடம் 30 சொற்கள்)
முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது:- 22 - 40

விண்ணப்ப முடிவுத் திகதி:- 30-12-1993

அனுப்ப வேண்டிய முகவரி:- தமிழீழ பொருண்

02. கணக்கு எழுதுநர்
03. எழுதுநர்
04. வெளிக்கள உத்தியோகத்தர்
05. தட்டெழுத்தாளர்

தகைமைகள்:- கணக்காளர் (முன் அனுபவம் உள்ளவராய் இருத்தல் வேண்டும்)

கணக்கு எழுதுநர் (கணக்கியல், வர்த்தகம், பொருளியல்)

எழுதுநர் (க. பொ. த. உயர்தரப் பரீட்சை சித்தி)

வெளிக்கள உத்தியோகத்தர் - (புவியியல்)
தட்டெழுத்தாளர் - ஆண் (க. பொ த. சா/தரம், நிமிடம் 30 சொற்கள்)

முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது:- 22 - 40

விண்ணப்ப முடிவுத் திகதி:- **30-12-1993**

அனுப்ப வேண்டிய முகவரி:- **தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், யாழ். மாவட்டச் செயலகம், கோண்டாவில்.**

குறிப்பு:- சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அவ்வவ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாகவே நியமனங்களும் வழங்கப்படும்.

(சி-8184)

## உங்களுக்கு தேவை

**விறகா?**
**கப்புகளா?**
**களங் கட்டி தடிகளா?**

அதி கூடிய வெப்பசக்தி தரக்கூடிய தரமான சவுக்கம் விறகுகளை நியாயவிலையில் பெற நாடுங்கள்

| | |
|---|---|
| சூழல் பாதுகாப்பு நிறுவனம் | அரசமரக் கூட்டுத்தாபன |
| நடவடிக்கை காரியாலயம் | விற்பனைக் காரியாலயம் |
| மணல்காடு. | கல்வியங்காடு-சங்கானை |

(சி-8183)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**21 - 12 - 93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11729

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

26-1321, 27-9030, 24-6811, 41-9530, 27-7717
24-7044, 26-5351, 41-1531, 41-8031, 26-0560
24-5734, 27-9416, 26-6796, 43-4580, 27-5186
26-4727, 28-1414, 40-7584, 26-8051, 28-2657
26-4436.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

24-6480, 26-3146, 24-6439, 26-2573, 28-0882
24-2558, 24-4153, 26-9186.

இவரின் இராஜினாமாவை தொடர்ந்து இந்த பதவிக்கு யார் நியமிக்கப்படுவர் என்பது குறித்து தெளிவாக தெரியவில்லை என்றும், இருந்த போதிலும் பெரும்பாலும் டங்கன் ஜெயவர்தனா இப்பதவிக்கு நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது

## முன்கோடை

மம் வட்டுக்கோட்டைக்கும் அராலிக்கும் இடைப்பட்ட தாழ்ந்த பகுதியில் அமைந்துள்ளது.

தொடர் மழையினால் வெளித்தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்ட நிலையில் இக்கிராமம் வெள்ளத்தில் மூழ்கியது. இதனால் இக்கிராமத்தில் வசித்த 30 பேரையும் மீட்க முடியாத நிலை காணப்பட்டது பொதுமக்களினதும் உதவி அரசாங்க அதிபர் மற்றும் கிராமசேவகர் ஆகியோரின் தீவிர முயற்சியை அடுத்து இரு நாட்களின்பின் இப்பொதுமக்கள் மீட்கப்பட்டுள்ளனர். இவர்களது உடைமைகள் அனைத்தும் நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தற்போது இவர்களுக்கான நிவாரண உதவிகள் சங்கானை உதவி அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச)

## 35 வருடங்களுக்கு

னது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பசுபிக் சமுத்திரத்தில் மேற்கு பகுதியிலிருந்து இப்பிராந்தியத்தின் கிழக்கு திசையில் அயனமண்டலப் பகுதியில் வீசும் காற்றே இதற்கு காரணம். இக் காற்றினால் வடக்கு கிழக்கில் மழை வீழ்ச்சி இம் முறை அதிகமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நோய்த்தடுப்பு

பகுதியில் அமைத்தல் அவசியமாகிறது. தூர்ந்த குளங்களை ஆழமாக்குதல் மூலமும் வடிகால அமைப்புகளை உரியவர்கள் உரியமுறையில் பேணுவதன் மூலமும் வெள்ளப்பெருக்கு பாதிப்பினை குறைக்க முடியும் எனவும் விடுதலைப் புலிகளின் நடமாடும் வைத்திய பிரிவு தெரிவித்துள்ளது.

மலேரியா பரவும் அபாயம் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட இடங்களில் தோன்றக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதால் மலேரியாதடுப்பு நடவடிக்கையில் உரியவர்கள் தீவிரமாக ஈடுபடுமாறும், வயிற்றோட்டம், காய்ச்சல் பரவலாக பரவிவருவதால் மக்கள் கொதித்தாறிய நீரை பயன்படுத்துவதுடன் கிணறுகளுக்கு குளோரின் இடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

களுக்கும் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு இல்லை. இதனாலேயேஅதன் போக்கு நமக்கு பிடிக்கவில்லை. அதை வற்புறுத்திய போது தான் இன்றைய சூழ்நிலை ஏற்பட்டது.

கேள்வி; பிரதமர் ரணில் தற்போது கூட்டணிக்கு ஏற்பட்ட பிரச்சினையை தீர்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளார். தாங்களும் அதில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகிறதே?

பதில்; நானும்குறிப்பிட்ட விடயங்களை அவரிடம் பேசவில்லை பிரச்சினையைஎப்படி தீர்க்கலாம் என்ற ஓர் அடிப்படையிலேயே பேசுகிறோம் அதில் எமக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதை நாம் ஜனாதிபதிக்கு தெரிவித்து அதன்பின் ஓர் உறுதியான முடிவு எடுக்கப்படும்.

கேள்வி: தென்பகுதி சிங்கவர்களுக்கு நீங்கள் பலிக்கடாவாகிவிட்டீர்கள். தொண்டமானினால் தமிழர் கேட்பதை பெறுவதாக கூறுகின்றனர் பத்திரிகைகளிலும் அன்றாடம் தங்களை தாக்கி கட்டுரைகள் வருகின்றன?

பதில்: பத்திரிகை, இனவாதிகள் மட்டுமல்ல அரசு கூட அந்த மனப்பான்மையை வளர்க்க முயற்சிக்கிறது அதனாலேயே நாம் விழிப்பாகி பிரச்சினையை உண்டாக்கி ஒரு முடிவு எடுக்க பார்க்கின்றோம்.

## கட்சி

படப் போவதாகவும் அவ்வாறு தான் தெரிவித்த கருத்தில் எவ்வித மாற்றமும் கிடையாது என்றும் குறிப்பிட்டார்.

மேற்படி கருத்துத் தொடர்பாக அரசாங்கத்திற்கு மிகவும் தெளிவாக தான் எடுத்து கூறியிருப்பதாகவும் தான் எடுத்த முடிவில் மாற்றம் எதையும் செய்யவில்லை என்றும் தெரிவித்தார்.

தனது முடிவு, நிதானமானதும் தீர்க்கமானதுமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மீண்டும் ஒருதடவை மத்திய மாகாண முதல் அமைச்சர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுமானால் இ.தொ.கா. காமினி திசநாயக்காவிற்கு ஆதரவாக வாக்களிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்து வாக்களிப்பதாகத் தெரிவித்துள்ள இந்த ஏழு உறுப்பினர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தென்

உறுப்பினர் பிரான்சிஸ் கோவின் ஒத்துழைப்பை எதிர்பார்த்து நிற்கின்றது. முதல் அமைச்சர் இவர் மீது இன்னும் நம்பிக்கை இருப்பதாக கூறுகின்றார் என அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

பெருமைவாய்ந்த பூநகரிசமர் 'தவளை' நடவடிக்கை இடம் பெறுகிறது. அத்துடன் தமிழீழத்தில் சிறிலங்கா விமானப் படையால் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சின் அழிவுகள், மாவீரர் நாள் நிகழ்வுகள் என்பவற்றுடன் வழமையான அம்சங்களும் இடம் பெறுகின்றன.

## அவைத்

பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அவைத் தலைவர் தள்ளுபடி செய்தார் இது ஒரு ஜனநாயக விரோதச் செயலாகும் முதல் அமைச்சர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவருவது தொடர்பாக மனு தாக்கல் செய்யப்பட்ட போதே தவறான முறையில் கொண்டுவரப்பட்டிருந்தால் அதனைத் தள்ளுபடி செய்திருக்க வேண்டும் ஆனால் அவர் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்த தினத்தன்று அதனைத் தள்ளுபடி செய்தமைக்கு ஆளும் கட்சி தனது பலவீனத்தை உணர்ந்து கொண்டமையால் மேற்கொள்ளப்பட்ட செயலே இதுவாகும் என அவ் எதிர்க்கட்சி உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

## நம்பிக்கை

நம்பிக்கையில்லா பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டபோது அதில் முதலமைச்சருக்கு எதிராகத் திட்டவட்டமான குற்றச் சாட்டுகள் ஏதுமில்லை என ராஜபக்ஷ தமது ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்.

இதையடுத்தே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முறைப்படி. சமர்ப்பிக்கப்படவில்லை எனக் கூறி சபை முதல்வரால் அது நிராகரிக்கப்பட்டது.

## கடத்தப்பட்டோர்

களிற்கு நாம் அடிபணியப் போவதில்லை. வேலைநிறுத்தம் தொடரும் இதில் எந்த மாற்றமும் ஏற்படாது. கொழும்பில்இருந்துகொண்டு அரசியல் நடத்த முடியாது. நாம் எமது உறுப்பினர் கடத்தபட்டதாலே வேலைநிறுத்தத்தில் குதித்தோம் என தோட்ட தொழிற்சங்க பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை இரண்டாவது நாளாக தொடர்ந்து அப்பகுதிகள் ஸ்தம்பித நிலையில் காணப்பட்டதாகவும்போக்குவரத்து வசதிகள் கூட வரையறுக்கப்பட்ட அளவில்நடைபெற்றதாகவும் தெரியவருகின்றது.

இதே வேளை தோட்டத் தொழிலாளர் தமது வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொள்ளவேண்டும் என மத்திய மாகாண கல்வி அமைச்சர் எஸ். சதாசிவம் கோரியுள்ளார்.

## தாமோதரம் சின்னராஜா

தாமோதரம் சின்னராஜா அவர்கள் 21-12-1993 அன்று கொழும்பில் மரணமானார். அன்னார் சுசிலா தேவியின் அன்புக் கணவரும் ரமேஷ், வத்சலா, சுபத்ரா, அகல்யா, கஸ்தூரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

வத்சலா
(மகள்)

இருபாலை.

(6980)

## திருமதி மயிலு சிவக்கொழுந்து

அல்வாய் தெற்கு முள்ளாவத்தை ''சிவமலர் வாசா'' வைச் சேர்ந்த திருமதி மயிலு சிவக்கொழுந்து 20-12-93 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற முருகர் வள்ளியின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மயிலுவின் அன்பு மனைவியும், திருமதி குலரத்தினம்-செல்வமலர் சோதிடர், சிவகுருநாதன் (ஓய்வுபெற்ற சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்), சிவநாதன் (ஜேர்மனி), திருமதிதுரைராசா, திரவியமலர், நவநீதன் (ஜேர்மனி), திரவியராசா (தாதியர் உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், மு குலரத்தினம், பொ. துரைராசா (C.T.B கிளிநொச்சி), பாக்கியமலர், கமலநாயகி (ஜேர்மனி), திருமலர், தேவறஞ்சினி (ஆசிரியை இமையாணன் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 21.12.93 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்திலிருந்து பி.ப. 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்பட்டது.

தகவல்:

| | |
|---|---|
| சிவமலர்வாசா'' | ம. சிவகுருநாதன் (சோதிடர்) |
| அல்வாய் தெற்கு, | (மகன்) |
| அல்வாய். | |

(6963)

## திருமதி மாசார் பொன்னையா பாக்கியம்

உரும்பராயை பிறப்பிடமாகவும், கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாசார் பொன்னையா பாக்கியம் 21-12-1993 இல் காலமானார்.

அன்னார் காலம் சென்ற மாசார் பொன்னையாவின் அன்பு மனைவியும் மனுவேற்பிள்ளை செல்லம், பொனன்ம்பலம் நவரட்ணம், மற்றும் காலஞ்சென்ற சின்னையா நல்லம்மா, கந்தையா நேசம்மா, செல்லப்பா பூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மனுவேற்பிள்ளை அன்ரனின் வளர்ப்புத் தாயாரும் (பெரிய தாயார்), கமலநாதன், தங்கராசா, விஜயகாந்தன், கமலாம்பிகை, வைத்தியநாதன், சாந்தநாயகி, அருட்திரு. டேவிட் அடிகளார் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் புதன்கிழமை (22-12-1993) பிற்பகல் 2 மணியளவில் கொடிகாமம் கச்சாய் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொடிகாமம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(6983) ம. அன்ரன் (கொடிகாமம்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.